cepa
centre for poverty analysis



# போரின் தாக்கத்துடன் வளர்ச்சி

## இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அனுபவங்கள்

ஷேரா விமலதர்ம
அமரசிறி டி சில்வா
ருவங்கி டி சில்வா

ஜூன் 2007

செயற்பாட்டுக் கட்டுரைத் தொடர் இல: 11 - 2007

# போரின் தாக்கத்துடன் வளர்ச்சி

## இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அனுபவங்கள்

**சேரா விமலதர்ம**
**அமரசிறி டி சில்வா**
**நிலக்ஷி டி சில்வா**
ஜீன் 2007

செய்முறைக் கட்டுரைத் தொடர் இல: 11 - 2007

© Centre for Poverty Analysis

இலங்கை தேசிய நூலகம் - வெளியீட்டில் உள்ள பட்டியல்

**விமலதர்ம, சேரா**
“போரின் தாக்கத்துடன் வளர்ச்சி”: இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் அனுபவங்கள் - சேரா விமலதர்ம, அமரசிறி டி சில்வா மற்றும் நிலக்ஷி டி சில்வா கொழும்பு: வறுமை ஆராய்ச்சி நிலையம் - 2007 - ப 38: படங்கள்; ச.மீ.29 (செய்முறைக் கட்டுரைத் தொடர் இல. 11-2007)

விலை ரூபா: 300.00

i) 305-90695 டிடிசி 22
ii) தலைப்பு
iii) டி சில்வா, அமரசிறி - இணை ஆசிரியர்
iv) டி சில்வா, நிலக்ஷி - இணை ஆசிரியர்

1. போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் (கிழக்கு மாகாணம்)
2. சமூகப் பிரச்சினைகள் - போர்

**ISBN:** 978-955-1040-35-2

வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் பதிப்புக்கள் தற்பொழுது பின்வரும் வகைகளைக் கொண்டுள்ளன; ஆய்வுகள், திரட்டிய தொகுப்புக்கள், செய்முறைக் கட்டுரைகள் மற்றும் விளக்கக் கட்டுரைகள்.

**சேரா விமலதர்ம:** வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஓர் தொழில்சார் உத்தியோகத்தராவர். இவர், இலண்டன் பல்கலைக்கழகத்தின் கீழைத்தேய மற்றும் ஆபிரிக்க கற்கை நெறிகளிலிருந்து அபிவிருத்திக் கல்வி மற்றும் சட்டம் என்பவற்றில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும், வன்செயல், மோதல் மற்றும் அபிவிருத்திக் கற்கைநெறியில் முதுமாணிப் பட்டத்தையும் கொண்டிருக்கிறார்.

**அமரசிறி டி சில்வா:** இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சமூகவியல் பிரிவின் ஓர் பேராசிரியராகவும், 2002-2004 வரை சமூகவியல் பிரிவின் தலைவராகவும் இருக்கிறார். இவர் அமெரிக்காவில் கலாநிதிப்பட்டம் பெற்று (PhD. UConn) பயிற்றப்பட்ட மானுடவியலாளர் என்பதுடன் தாய்லாந்து, பாங்கொக் நகரின் ஆசிய தொழில்நுட்ப நிலையத்தின் (AIT) கிராமிய அபிவிருத்தித் திட்டமிடலில் முதுமாணிப் பட்டத்தையும் கொண்டுள்ளார்.

**நிலக்ஷி டி சில்வா:** வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஓர் சிரேஷ்ட தொழில்சார் உத்தியோகத்தர். இவர், பிரின்ஸ்டென் பல்கலைக்கழகத்தின் வூட்ரோ வில்சன் பொது மற்றும் சர்வதேசக் கொள்கைகளிலிருந்து கொள்கைப் பகுப்பாய்வில் முதுமாணிப் பட்டத்தையும், அவுஸ்திரேலியாவின் மொனாஷ் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் அரசியலில் கலைமாணிச் சிறப்புப் பட்டத்தையும் பெற்றிருக்கிறார்.

**வறுமை ஆராய்ச்சி நிலையம் (CEPA):** 2001இல் ஸ்தாபிக்கப்பட்ட வறுமை தொடர்பான அபிவிருத்திச் செயற்பாடுகள் மீது தொழில்சார் சேவைகளை நல்கும் ஓர் சுயாதீனமான அமைப்பாகும். அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் தொழில்சார் வல்லுநர்களுக்கு பிரயோக ஆராய்ச்சி, ஆலோசனைச் சேவைகள், பயிற்சி மற்றும் பேச்சுவார்த்தை, கருத்துப் பரிமாறல்கள் போன்ற துறைகளில் வறுமை ஆராய்ச்சி நிலையம் தன் சேவைகளை நல்குகிறது. இச் சேவைகள், வறுமைத் தாக்கத்தைக் கண்காணித்தல், வறுமையும் முரண்பாடுகளும் மற்றும் வறுமைக் கணிப்பீடு மற்றும் விடய அறிவை முகாமைத்துவம் செய்தல் போன்ற நிகழ்ச்சிகளின் முக்கிய துறைகளை தற்பொழுது உள்ளடக்கி கவனம் செலுத்துகின்றது.

“போரின் தாக்கத்துடன் வளர்ச்சி” எனும் ஆய்வு வறுமை ஆராய்ச்சி நிலையத்தின், வறுமையும் மற்றும் முரண்பாட்டு (PAC – Poverty and Conflict) நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு ஆக்கமாகும். இது இலங்கை நிலைமைகளில் வறுமைக்கும் முரண்பாடுகளுக்கும் இடையிலான இடைத்தாக்கங்களை மேலும் புரிந்து கொள்ள முனைகிறது.

**சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களம் (DFID):** இது பிரித்தானியாவின் அபிவிருத்தி ஊக்குவிப்பு மற்றும் வறுமைக் குறைப்புக்குப் பொறுப்பான அரசாங்கத் திணைக்களமாகும். அத்துடன் இது வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் வறுமை மற்றும் முரண்பாடுகள் நிகழ்ச்சித் திட்டத்திற்கு அனுசரணை வழங்குகிறது. உலகளாவியளவில் குறிப்பாக மில்லேனிய அபிவிருத்தி இலக்குகளை (MDGs – Millenium Development Goals) அடைவதன் மூலம் வறுமைக் குறைப்பும் நிலையான அபிவிருத்தியுமே சர்வதேச அபிவிருத்திக்கான திணைக்களத்தின் ஒட்டுமொத்தக் குறிக்கோளாகும். ஆபிரிக்க சகாரா மற்றும் ஆசியாவின் மிகவும் வறிய உப நாடுகளிற்கு உதவிகள் கூடுதலாக வழங்கப்பட்டாலும், சர்வதேச அபிவிருத்தித் திணைக்களம் இலத்தீன் அமெரிக்க மற்றும் கிழக்கு ஐரோப்பாவின் நடுத்தர வருமானம் ஈட்டும் நாடுகளிலும் வறுமைக் குறைப்பு மற்றும் நிலையான அபிவிருத்திக்கு பங்களிக்கின்றது. அது, மில்லேனிய அபிவிருத்தி இலக்குகளுக்காக அர்ப்பணிப்புடனுள்ள அரசாங்கங்கள் மற்றும் சிவில் சமூகங்கள், தனியார் துறை மற்றும் ஆராய்ச்சி அமைப்புக்களுடன் கூட்டிணைந்து செயல்படுகின்றது.

## நன்றியுரை

இந்த ஆய்வறிக்கை ஓர் கூட்டு முயற்சியின் விளைவாகும். ஆய்வின் எண்ணக்கரு உருவாக்கம் மற்றும் வடிவமைப்பிற்கும் வருணி கணேபொல மற்றும் காஞ்சன ருவன்புர ஆகியோர் தங்களது பெறுமதியான பங்களிப்பை நல்கினர். ஹேமந்தி தசநாயக்க, நிரூபா புஷ்பகுமார மற்றும் சத்தியசோபனா சத்தியநாதன் ஆகியோர் ஆய்வின் ஆரம்பக் கட்டங்களில் உதவினர். எம். மாலதி, எஸ். அமுதமணி, எஸ். உஷா நந்தினி, ஆர். அமுதா, கே. ஜீவா, ஏ. இலங்கேஸ்வரி, ரி. எச். சாமிலா நதிஷானி, எம். நிரஞ்சலாதேவி மற்றும் பி. யசோதினி ஆகியோர் இம்மாவட்டங்களில் குடும்பங்களுடனான நேர்காணல்களை மேற்கொள்வதற்கு விகிதா ரெங்கநாதன் வழிகாட்டல் களையும், உதவிகளையும் நல்கியதுடன், தரமான கள ஆய்விற்கும் (ஷகிலா ஜபார் மற்றும் மொகமெட் பாகிம் ஆகியோரும்) உதவினர். ஷகிலா ஜபாரும் விகிதா ரெங்கநாதனும் தரவுகளை பகுப்பாய்ந்து அறிக்கையை தயாரிப்பதில் பங்களித்தனர். வருணி கணேபொலவும் கிளாடியா இபார்குன் (Claudia Ibargiien) ஆகியோர் இவ்வறிக்கையின் முன்னைய பூர்வாங்க வரைபுகள் தொடர்பாக பயனுள்ள குறிப்புக்களை நல்கினர். அவர்களது உதவியும், வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஏனைய ஊழியர்களின் ஆதரவும் நன்றியுடன் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

கிழக்கு மாகாணத்தில் நேர்காணலின்போது எம்மை தங்களது இல்லங்களில் வரவேற்று, உபசரித்து மிக முக்கியமாக தங்கள் அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எங்கள் நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகிறோம். அவர்களது தைரியம், மன உறுதிப்பாடு மற்றும் மனிதாபிமானம் என்பன ஊக்கமளிப்பவையாயிருந்ததுடன் அவர்களைச் சந்திக்க சந்தர்ப்பம் கிடைத்ததில் நாம் பெருமைப்படுகிறோம்.

## பொருளடக்கம்


**நன்றியுரை**

**நிறைவேற்றுச் சுருக்கம்** 1

**1. அறிமுகம்** 2

**2. ஆய்வின் அணுகுமுறையும் ஆராய்ச்சி வழிமுறைகளும்** 4

**3. குடும்பங்களின் மீது மோதல்களினால் ஏற்படும் தாக்கங்கள்** 6
3.1 கிழக்கு மாகாணத்தின் மீதான ஓர் பார்வை 6
3.2 மோதல்கள் தொடர்பாக குடும்பங்களின் கண்ணோட்டம் 7
3.3 முரண்பாடுகள் மற்றும் வறுமை பற்றிய கண்ணோட்டம் 9

**4. சிறுவர்களும் ஆயுத மோதலும்** 11
4.1 மோதலும் கல்வி நடவடிக்கைகளும் 11
4.2 மோதலும் சிறுவர்களின் உழைப்பும் 16
4.3 மோதலும் சிறுவர்களின் உடல் நலமும் 19
4.4 சிறுவர்களும் அவர்களுக்கு பக்கத் துணையாயிருக்கும் முறைகளும் 20

**5. சிறுவர்களின் கண்ணோட்டம்** 23

**6. முடிவுரையும் பரிந்துரைகளும்** 26

**7. உசாத்துணை** 30

**பின்னிணைப்பு 1 - இலங்கையின் தேசப்படம்** 35

**பின்னிணைப்பு 2 - மதிப்பாய்வு செய்யப்பட்ட கிராமங்களின் பெயர்கள்** 36

## நிறைவேற்றுச் சுருக்கம்

இலங்கையில் ஆயுத மோதல்களினால் சிறுவர்கள் எவ்விதம் பாதிப்படைகிறார்கள் என்பதின் புரிந்து கொள்ளலை மேலும் வலுப்படுத்துவதற்காக ஆய்வு மூலமான கற்றல் மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வு ஓர் ஆராய்ந்தறியும் கற்கையாக கருதப்பட்டு கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்கள் மீது கவனம் செலுத்தப்பட்டது. இக் கற்கை ஆய்வின் பெறுபேறுகள், ஆயுத மோதலினால் சிறுவர்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை உறுதிப்படுத்தியது. இலங்கையின் நீண்டகால மோதல்களில். அநேகமான வயது கூடிய சிறுவர்களும் இளம் வாலிபப் பருவத்தினரும் வன்முறைகளுக்கும், பாதுகாப்பின்மைக்கும் கூடிய காலம் முகம் கொடுத்ததுடன் தொடர்ந்தும் இடையறாத அச்ச உணர்வுடனேயே வாழ்கின்றனர். வன்செயல்களின் போது ஆசிரியர்கள் வராமையாலும், பாடசாலைகள் அடிக்கடி மூடப்பட்டதாலும் அவர்களின் கல்வி நடவடிக்கைகளும் பாதிக்கப்பட்டன. இவ்வறிக்கையில் கலந்துரையாடப்பட்ட இறப்பு, அங்கவீனமாதல், குடும்பத்து உறுப்பினர்களின் இழப்பு மற்றும் இடப்பெயர்வு போன்ற பல வழிகளால் மோதல் சிறுவர்களை நேரடியாக பாதித்திருக்கையில் அநேகமான சிறுவர்கள் மோதல்களினால் ஏற்பட்ட வறுமையின் மூலமாக பாதிக்கப்பட்டனர். இவ்வாய்விற்கு உட்படுத்தப்பட்ட அநேகமாக ஒவ்வொரு குடும்பமும் மோதல்களின் விளைவாக மேலும் வறுமை நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் தங்களது நிலங்கள், சொத்துக்கள் மற்றும் வாழ்வாதாரங்களை இழந்ததுடன் சில சமயங்களில் சிறுவர்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகளால் வருமானம் ஈட்டவேண்டிய தேவைகளுக்கும் நிர்ப்பந்திக்கப்ட்டுள்ளார்கள். வீதிகள், வைத்தியசாலைகள் மற்றும் பாடசாலைகள் என போதியளவில் கொண்டிராததும் மற்றும் சீர்குலைந்ததுமான உட்கட்டுமாண வசதிகளைக் கொண்ட இப்பிரதேசங்களில் மோதல் வறுமை நிலையை மேலும் தூண்டியுள்ளதுடன் சிறுவர்களினது அபிவிருத்தி மற்றும் நல்வாழ்வையும் கூட பாதித்துள்ளது. இறுதியாக, சிறுவர்கள் மற்றும் அதேபோன்று வயது வந்தவர்களிடையேயும் மோதல் திரும்பவும் ஆரம்பிக்கலாம் என்ற அச்சம் பெருமளவில் உள்ளபோதும், சிறுவர்கள் அவர்களது குடும்பங்கள் மற்றும் சமூகங்கள் முகம் கொடுத்த பிரச்சினைகளை எதிர்கொண்டு வெற்றி கொள்ளும் மன உறுதிப்பாட்டையும், சக்தியையும் பெருமளவில் வெளிப்படுத்தினர்.

## 1. அறிமுகம்

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகள் 20 வருடகாலங்களிற்கு மேலாக கடுமையான வன்முறை மோதல்களால் பாதிக்கப்பட்டுள்ளது. அநேகமான மக்கள் இறந்தனர், பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்குப் பாரிய சேதங்கள் ஏற்படுத்தப்பட்டு முழுவாழ்க்கையும் சீர்குலைந்துள்ளது. மோதல்களின்போது அடிக்கடி பெண்கள் மற்றும் சிறுவர்கள் போன்ற பலவீனமான தொகுதியினரே பெரிதும் பாதிக்கப்பட்டனர். 1989ஆம் ஆண்டின் சிறுவர் உரிமைகள் மீதான சமவாயம் (CRC) , சிறுவர்களின் உயிர்வாழல், பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கான உலகளாவிய பட்டயமாகும். ஆயினும் சிறுவர்கள் மீதான ஆயுத மோதல்களின்[1] தாக்கம் பற்றிய ஐக்கிய நாடுகளுக்கான 1996ஆம் ஆண்டின் மச்செலின் அறிக்கை, போரானது சிறுவர்களுக்கு பெருமளவில் அச்சுறுத்தலாயிருப்பதுடன் சிறுவர் உரிமைகள் மீதான சமவாயத்தில் குறிப்பிடப்பட்ட அவர்களது பாதுகாப்பிற்கான உத்தரவாதத்தை தெளிவாக மீறும் செயல் என சுட்டிக் காட்டுகிறது. இலங்கையில் கூட நிலைமைகள் இதே விதமானவையாகவே உள்ளன; சில கணிப்பின்படி நாட்டின் 900,000க்கும் அதிகமான சிறுவர்கள் வடக்கு, கிழக்கு மோதல்களினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன், இவர்களில் மூன்றிலொரு பங்கிற்கும் அதிகமானோர் குறைந்தது ஒரு தடவையேனும் இடம் பெயர்ந்துள்ளார்கள் எனத் தெரிகிறது. (சேவ் த சில்றன் 1998, 2000).

எப்படியிருந்த போதிலும், சில வருடங்களுக்கு முன்னர்வரை வடக்கு மற்றும் கிழக்குக்கான மார்க்கங்கள் பிரச்சினைகளுக்கு உரியனவாயிருந்ததினால் பிரதானமாக இலங்கையில் சிறுவர்கள் எவ்விதம் மோதல்களினால் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பது பற்றிய முறையானதும் உள்ளூர் மயப்படுத்தப்பட்டதுமான தகவல்கள் போதியளவு இல்லாதிருந்தன. வடக்கு, கிழக்குக்கான புள்ளி விபரங்கள் இன்னமும் தொகுக்கப்படுவதுடன், இப்பிராந்தியத்தின் வறுமை தொடர்பான புள்ளி விபரங்கள் இன்னமும் இல்லாதது கடந்த 20 வருடங்களில் இப்பிராந்தியத்தில் ஏற்பட்ட அபிவிருத்தி மற்றும் மாற்றங்களைப் புரிந்து கொள்கின்ற பணியை மேலும் கடினமாக்கியுள்ளது. அபிவிருத்தி இடையீடுகள் மற்றும் கொள்கைகள் என்பன அதிகளவில், குறைவாக அல்லது முறையான உள்ளூர் ஆய்வுகளில் இல்லாது நாட்டின் அல்லது உலகின் வேறோர் பகுதியில் நடைபெறும் அனுபவங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுகின்றன.

இவ் ஆய்வானது, வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் வறுமை மற்றும் முரண்பாடுகள் நிகழ்ச்சித் திட்டத்தினால், இலங்கையில் சிறுவர்கள் எவ்விதம் ஆயுத மோதல்களினால் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை மேலும் அறியவும் பொருத்தமான இடையீடுகள் தொடர்பான கொள்கை உரையாடல்கள் பற்றி அறியத்தரவும் மேற்கொள்ளப்பட்டது. இக் கற்கையானது, மோதல்களினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள சிறுவர்களின் உண்மையான அனுபவங்களை அபிவிருத்திக்கான கலந்துரையாடல்களுக்குக் கொண்டு வரவும், சிறுவர்கள் மீது போரின் தாக்கம் பற்றிய மேலும் பொதுவான விளக்கங்களை நோக்கியதானதும், படையணியில் இணைந்துள்ள சிறார்கள் போன்ற தனித்துவமான குழுக்கள் சார்ந்த பிரச்சினைகளில் கவனம் செலுத்தி ஆய்வதை மீள் தொடர்பு படுத்தவும் முயற்சிக்கிறது.

ஆயுத மோதல்களினால் சிறுவர்கள் நேரடியாகவும் மற்றும் மறைமுகமாகவும் பாதிக்கப்படலாம். வன்முறைகளால் அவர்கள் கொல்லப்படவும், காயப்படவும் அல்லது அங்கவீனர்களாகவும் ஆகலாம். பெற்றோர்களில் ஒருவரை அல்லது இருவரையும், உடன்பிறப்புக்கள் அல்லது வேறு குடும்ப உறுப்பினரையோ இழக்கலாம். அவர்கள் தங்களது இருப்பிடங்களை இழந்து இடம்பெயர்ந்தவர்களாகவும் மாறலாம். இவை யாவும் நன்கு அறியப்பட்டதும், புலப்படக் கூடியதுமான மோதல்களின் விளைவுகள். சிறுவர்கள் நன்கு புலப்படாத வழிகளாலும் பாதிக்கப்படலாம். அவர்களது கல்வி நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டு, குடும்பத்தின் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு பங்களிக்கவோ அல்லது வருமானம் ஈட்டுபவர்களாக மாறுவதற்கு நிர்ப்பந்திக்கப்படலாம். மோதல் பிரதேசங்களில் ஏற்படும் பொதுவான பொருளாதார வீழ்ச்சி, உட்கட்டுமான அமைப்புக்களின் அழிவுகள் மற்றும் நீண்டகால பாதுகாப்பின்மை போன்றன மக்கள் தொகையின் வளம் குறைக்கும் தாக்கத்தைக் கொண்டுள்ளன. ஒரு குடும்பம் ஏழ்மையுறுகையில் சிறுவர்களும் கூட பாதிக்கப்படுகிறார்கள். மோதலுக்கும் வறுமைக்கும் இடையிலான தொடர்பு இவ்வாய்வு மூலமான கற்றலின் பிரதான ஆய்வுப் பொருளாக இருந்தது. சிறுவர்களது அனுபவங்களை நோக்குவதன் மூலம் மோதல்களும் வறுமையும் எவ்விதம் இடைத் தொடர்புபடுகின்றன என்பதைப் புரிந்து கொள்வதை மேலும் விரிவுபடுத்த இவ்வாய்வு எண்ணுகிறது.

இச் சிறுவர்களுக்கு சொந்தமான குடும்பங்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகளை கவனத்தில் கொள்ளாது சிறுவர்களைப் பாதிக்கும் பிரச்சினைகள் பற்றி முழுவதுமாக அறிந்து கொள்ளவது கடினமானதொன்றாகும். இரு பெற்றோர்களையும் கொண்ட அல்லது குடும்பத்தை வழிநடத்தும் தலைவியாக பெண்ணைக் கொண்ட குடும்பத்தின் தன்மையானது, சிறுவர்கள் எவ்விதம் போரினால் பாதிக்கப்படுகிறார்கள் மற்றும் ஈடுகொடுக்கிறார்கள்

1. முழு அறிக்கையும் http://www.unicef.org/graca/. எனும் இணையத்தள முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்

என்பதில் ஒரு தாக்கத்தைக் கொண்டிருக்கலாம். இதற்கு மேலதிகமாக, நீண்ட மோதலின் தன்மையாலும், இலங்கையில் தற்பொழுது நிலவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தாலும் (MOU)[2], இந்த ஆய்வு மூலமான கற்கை தற்போதைய நிலைமைகளை மட்டும் புரிந்து கொள்வதை கருதுகோளாகக் கொள்ளாமல் விசேடமாக தீவிரமான வன்முறைகளும், பாதுகாப்பின்மையும் நிலவிய காலப்பகுதியில் சிறுவர்களின் கடந்தகால அனுபவங்களையும் கருதுகோளாகக் கொள்கிறது.

இவ்வாய்வின் கவனம் கிழக்கு மாகாணத்தைப் பற்றியதாகும். ஆய்வின் ஆழமான தீவிரத்தன்மை கருதி ஆய்விற்கான பு'கோளப் பரப்பெல்லைகளை மட்டுப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டது. இவ்விதமான ஆய்விற்கு, குறிப்பான சில தொடர்பான குணாம்சங்களை கொண்டிருந்ததினால் கிழக்கு மாகாணம் இதற்குத் தெரிவு செய்யப்பட்டது. கிழக்கு மாகாணத்தின் சனத்தொகையும் சிங்களவர், தமிழர் மற்றும் முஸ்லிம்கள் இனப் பரம்பலைக் கொண்டிருந்தது. அத்துடன் இப்பிரதேசம் மேலும் மோதல் அதிகரிப்பிற்கான வாய்ப்புடன் கூடிய மிகவும் கிளர்ச்சியுடைய ஓர் பிரதேசமாவும் இது கருதப்பட்டது. ஒரு நாடு என்று முழுமையான ரீதியில் நோக்குமிடத்து, கிழக்கு மாகாணம் அபிவிருத்தி இடையீடுகள் மற்றும் ஆய்விற்கான பிரதேசம் என இரு வழிகளாலும் குறைந்தளவிலான கவனத்தையே பெற்றுள்ளது. மோதல் தொடர்பான ஆய்வுகள் மற்றும் கொள்கைக் கலந்துரையாடல் களிலும் கூட சில சமயங்களில், நாட்டின் வட பகுதிக்கு அனுகூலமான வகையில் இப்பிரதேசம் புறக்கணிக்கப்பட்டுள்ளது.

இவ்வாய்வுக்கு மூன்று மட்டுப்பாடுகள் உள்ளன. இலங்கையில் 20 வருடகாலப் போர் அதிக எண்ணிக்கையிலான சிறுவர்களை அநாதைகளாக்கி, நலன்புரி நிலையங்களில் அவர்களை வாழ வைத்துள்ளது. இவ்வாய்வு ஓர் அமைப்பு ரீதியான சூழலில் உள்ள சிறுவர்களைவிட குடும்பத்துடன் இணைந்திருக்கின்ற சிறுவர்களைக் குறித்தே கவனம் செலுத்துகின்றது. வேறு பராமரிப்பு முறைகளில் உள்ள சிறுவர்கள் மோதல்களின் தாக்கங்களுக்கு எவ்விதம் ஈடுகொடுக்கிறார்கள் அல்லது பாதிக்கப் படுகிறார்கள் என்பது பற்றி அறிய வேறு தனியானதோர் ஆய்வு தேவையாகும். இரண்டாவதாக, இவ் ஆய்வானது, கள ஆய்வில் ஈடுபட்டிருந்த குழுவினரின் பாதுகாப்புக் காரணங்களுக்காக தமிழீழ விடுதலைப் புலிகளின் (த.வி.பு) கட்டுப்பாட்டுக்குட்பட்ட பிரதேசங்களில் மேற்கொள்ளப் படவில்லை. இறுதியாக, இவ்வாய்வுக்குட்படுத்தப்பட்ட பகுதிகளின் குடும்பங்கள் மற்றும் சிறுவர்களும் 2004ஆம் ஆண்டின் டிசம்பர் மாதத்துக் கடற்கோள் அனர்த்தத்தின் விளைவாக பெரிதும் பாதிப்படைந்தனர். இதனால் திருகோணமலை மாவட்டத்தில் தரமான நேர்காணல்களை பூர்த்தி செய்ய இயலவில்லை. இதன் விளைவாக இவ்வறிக்கை, மாகாணத்தின் மூன்று மாவட்டங்களினதும் குடும்பங்கள் சார்ந்த தகவல் விவரங்களை பிரதிபலிக்கின்றன. ஆயினும் சிறுவர்களுடனான விரிவான நேர்காணல்கள் அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களைப் பிரதிபலிப்பவையாகவும், அத்தகவல்கள் யாவும் 2004ஆம் ஆண்டின் டிசம்பர் 26ஆம்[3] திகதிக்கு முன்னதாக சேகரிக்கப்பட்டவையாகவும் உள்ளன.

இந்த அறிக்கை ஐந்து பிரதான அத்தியாயங்களைக் கொண்டதாக ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. அடுத்த அத்தியாயம் ஆய்வு முறையையும் அதற்கான அணுகுதலுக்கான ஓர் மேலோட்டப் பார்வையைத் தருகிறது. அத்தியாயம் 3, சிறுவர்கள் குடும்ப மட்டத்தில் - மோதலினால் தாம் பாதிக்கப்பட்ட வழிகள் குறித்து சிறுவர்களினது கண்ணோட்டம் - அதனை குடும்பத்தில் கலந்துரை யாடுவது போன்றவற்றின் மீதான ஓர் பார்வையைத் தருகிறது. அதனைத் தொடரும் இரண்டு அத்தியாயங்களும் சிறுவர்களது அனுபவங்கள் குறித்துக் கவனம் செலுத்துகின்றது. அத்தியாயம் 4 சிறுவர்கள் தமது பாடசாலைக்கு செல்லல் பாதிப்படைந்தது எவ்விதம், சிறுவர்கள் தொழில் செய்தல் மற்றும் வேறு விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுவதைத் தருகிறது. அத்தியாயம் 5 நாட்டு நிலைமைகள் பற்றிய இன்றைய மற்றும் எதிர்கால கண்ணோட்டங்களையும், அவர்களது சொந்த அபிலாஷைகளையும் பிரதிபலிக்கிறது. முடிவுரை அத்தியாயமானது இவ்வறிக்கையின் பிரதான ஆய்வுப் பெறுபேற்று முடிவுகளை ஒருங்கிணைப்பதுடன் இப்பெறுபேறுகளிலிருந்து உருவாகும் கொள்கைப் பரிந்துரைகளுக்கானதோர் கலந்துரையாடலை நல்குகிறது.

இந்த ஆய்வு உறுதியானதும், இறுதியானதுமாக அல்லாமல் ஆராய்ச்சிக்குரியதொன்றாகும். அதிகளவிலான அல்லது பொதுப்படையான தரவுகளைவிட சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் நிஜ அனுபவங்களிலேயே நாம் கவனம் செலுத்தினோம். இதன் முடிவாக, இயலுமான வரைக்கும், போரினால் தாம் எவ்விதம் பாதிக்கப்பட்டோம் என்பதைக் கலந்துரையாடும் சிறுவர்களின்[4] குரல்களின் தொனியைப் பேண நாம் முயற்சித்திருக்கிறோம்.

---

2. பொதுவாக புரிந்துணர்வு ஒப்பந்தம் என்றழைக்கப்படும் யுத்தநிறுத்த ஒப்பந்தம் இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தில் கைச்சாத்தானது.

3. இலங்கைத் தேசப்படத்திற்கு பின்னிணைப்பு 1ஐப் பார்க்கவும்.

4. சிறுவர்களின் அநாமதேயத்தைப் பேணுவதற்காக அனைத்துப் பெயர்களும் மாற்றப்பட்டுள்ளன.

## 2. ஆய்வின் அணுகுமுறையும் ஆராய்ச்சி வழிமுறைகளும்

சிறுவர் உரிமைகளுக்கான சமவாயத்தில் கூறப்பட்டுள்ள மாதிரி 'சிறுவர்' என்பதன் சட்ட ரீதியான வரைவிலக்கணத்தின்படி 18 வயதிற்குக் குறைவான எவரும் சிறுவர் எனப்படுவர். இவ்வாய்வு மூலமான ஆராய்ச்சிகளின் ஆரம்ப நிலைகளின் போது, இவ்வாய்வை 'சிறுவர்' என்பதன் வரைவிலக்கணப்படி மட்டுப்படுத்துவதென்பது 18 வயதிற்குக் சற்று அதிகமானவர்களின் சிறுவர் பராயத்து அனுபவங்களைத் தவிர்ப்பதாக அமையும் என்பது புலப்பட்டது. இலங்கையின் நீண்டகால மோதல் வரலாற்றில், வன்முறைகள் தீவிரமாகவிருந்த உச்சக்காலப் பகுதியின் போது சிறுவர்களாயிருந்த பலர், இப்பொழுது 'சிறுவர்' என்ற வகைக்குள் பொருந்தாதவர்களாகவும், இளம் வாலிபர்களாகவும் உள்ளனர். அதேபோன்று, அண்மைய யுத்தநிறுத்த காலப்பகுதியின் போது 10 வயதிற்குக் குறைவான சிறுவர்கள் மோதலினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களாயினும் அதனை மீள் நினைவுபடுத்த முடியாதவர்களாகவும் இருப்பர்.

இந்த ஆய்வு, இலங்கையின் சிறுவர்களது அனுபவங்களை கவனத்தில் கொள்வதால், ஆயுத மோதல் காலப்பகுதியில் சிறுவர்களாயிருந்தவர்களின் அனுபவங்களைப் பகிர்கின்ற சந்தர்ப்பம், தற்போது அவர்கள் சட்ட ரீதியான வரைவிலக்கணத்திற்குள் கொள்ளப்பட முடியாத காரணத்தினால் மட்டும் மறுக்கப்படலாகாது என உணரப்பட்டது. இதனால், 10-18 வயதுகளிற்கிடைப்பட்ட ஒரு குழு மற்றும் 19-25 வயதுகளிற்கிடைப்பட்ட மற்றுமொரு குழு என இரு 'சிறுவர்' குழுக்கள் மீது கவனம் செலுத்தி இவ்வாய்வை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. வேறுவிதமாகக் கூறுவதாயின், இந்த அணுகுமுறையானது, 'சிறுவர்' என்பதின் சர்வதேச வரைவிலக்கணத்தை, மோதல்கள் நடைபெற்ற காலப்பகுதியில் ஒன்று, மற்றையது புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னரான காலப்பகுதியென இரு வெவ்வேறு காலப்பகுதியில் பிரயோகித்தது. இவ்வறிக்கையில் 'சிறுவர்' அல்லது 'சிறுவர்கள்' என குறிக்கப்படுவது இவ்விரு குழுவையும் உள்ளடக்கும். எப்படியிருந்த போதிலும் இம்முயற்சியானது 'சிறுவர்' என்பதின் வரைவிலக்கணத்தை மீள வரைபது என பொருள் கொள்ளப்படலாகாது. இது வெறுமே, இலங்கைளில் ஆயுத மோதல்கள் தொடர்பாக சிறுவர்களது அனுபவங்களைப் புரிந்து கொள்வதற்கான ஓர் உபாயமாகும்.

இவ்வாய்வு, முதலாம் தர, இரண்டாம் தரத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டதுடன், பின்வரும் பகுதிகள் பின்பற்றப்பட்ட வழிமுறையின் மேலோட்டமான பார்வையைத் தருகிறது.

### *முதலாம் தர தரவுகள்*

ஏற்கனவே குறிப்பிட்டபடி, இவ்வாய்வு கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்கள் குறித்து கவனம் செலுத்துகிறது. இப்பிரதேசத்தின் குடும்பங்கள் மற்றும் சிறுவர்களுடன் பணிபுரியும் நிறுவனங் களுடனான நேர்காணல்கள் மூலம் தரவுகள் சேகரிக்கப்பட்டன. அந்த நிறுவனங்களுடன் நேர் காணல்களை மேற்கொண்டதற்கான நோக்கம், சிறுவர்களுக்காக அமுல்படுத்தப்படும் செயற் திட்டங்கள் எவை என்பதை இனம் காணவும், அத்திட்டங்கள் பிரச்சினைகள் குறித்தான தீர்வைத் தருவதில் வெற்றியடைந்துள்ளனவா, அவற்றை மேம்படுத்துவதிலும், விரிவுபடுத்தல் போன்றவற்றுக்கு எவ்விதமான விளைவுகளை காட்டுகின்றன என்பதை அறிவதற்கும் ஆகும். இந்த நேர்காணல்கள், அணுகுதல் மற்றும் இனத்துவ பரம்பல் போன்ற பிரச்சினைகளை விளக்கும் ஆய்வு மாதிரிகளுக்கான கிராமங்களை அடையாளம் காணவும் உதவின.

குடும்பங்களுக்கான ஆய்வு மாதிரி, எழுந்தமானமான மாதிரி மூலம் பெறப்பட்ட இணைந்த மாதிரி முறையை உபயோகித்துப் பெறப்பட்டது. ஆய்வின் முதலாவது கட்டத்தில் ஒவ்வொரு மாவட்டத்திலும் அதன் மாதிரியில் இனத்துவப் பரம்பல் நிலையைப் பிரதிபலிக்கும் விதமாகக் குடும்பங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டின் குடிசனத்தொகைப் புள்ளிவிபரம் இத்தேவைக்காக உபயோகிக்கப்பட்டது. வருமானம் அல்லது வறுமை நிலையின் வேறெந்தக் குறிகாட்டிகளையும் அடிப்படையாகக் கொண்டு குடும்பங்கள் தெரிந்தெடுக்கப்படவில்லைஞ மாறாக குறைந்தது ஒரு சிறுவர் அல்லது 10-25 வயதிற்கிடைப்பட்ட இளம் வாலிபரைக் கொண்ட தனியான குடும்பங்கள் எழுந்தமானமாக இந்த ஆய்விற்காகத் தெரிவு செய்யப்பட்டன. இந்த ஆராய்வு நேரடியாக குடும்பத் தலைவர் அல்லது தலைவியுடனானதாக இருந்தது. நேர்காணல்களை நடாத்துவதற்கு முன்னர் ஒவ்வொரு கிராமமும், அது கொண்டுள்ள வீடுகளின் இருப்பிடங்களை அடையாளம் காண்பதற்காகவும், கிராமத்தின் ஓர் பொதுவான விவரணத்தைத் தருவதற்காகவும் வரைபடமாகக் குறிக்கப்பட்டது.

மாதிரிக்கான கட்டமைப்பிற்கேற்ப இம்மூன்று மாவட்டங்களிலும் மொத்தமாக 310 குடும்ப நேர்காணல்கள் நடாத்தப்பட்டன. நடாத்தப்பட்ட இம் 310 நேர்காணல்களில், 7 நேர்காணல்கள் போதிய தரவுகள் இல்லாததின் காரணமாக தவிர்க்கப்பட வேண்டியிருந்தது. கீழ்வரும் அட்டவணை நேர்காணல்களின் குடும்ப ரீதியான இறுதி விபரங்களைத் தருகின்றது.

*அட்டவணை 2.1 – குடும்ப மாதிரியின் பரம்பல்* [5]

| மாவட்டம் | இனம் | | | |
| --- | --- | --- | --- | --- |
| **சிங்களவர்** | **தமிழர்** | **முஸ்லிம்** | **மொத்தம்** | |
| அம்பாறை | 41 | 21 | 38 | 100 |
| மட்டக்களப்பு | •பொ/இ | 62 | 38 | 100 |
| திருகோணமலை | 38 | 23 | 42 | 100 |
| **மொத்தம்** | **79** | **106** | **118** | **303** |

- **பொருத்தம் இல்லை.**

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, குடும்ப மாதிரிக்கான இனப்பரம்பல் 2001ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டுத் தொகையை அடிப்படையாகக் கொண்டதாகும். எப்படியிருந்த போதிலும், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் சில பகுதிகளில் 2001ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீடு மேற்கொள்ளப் படாததினால் இங்கு தரப்பட்ட புள்ளிவிபரங்கள் கணிப்பீட்டளவிலானவை எனக் கருதப்படுகின்றது. இந்தப் புள்ளிவிபரங்கள் பொதுவாக அவற்றின் ஒப்பீட்டு ரீதியில் சரியானவையாக ஏற்றுக்கொள்ளப் பட்டன. (உதாரணம்: புள்ளிவிபரங்களின்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் 1%க்கும் குறைவான சிங்கள மக்களே உள்ளதாக குறிப்பிடுகின்றதினால் அதன்படி இம்மாவட்டத்தில் சிங்களக் குடும்பங்கள் இந்த மாதிரியில் உள்ளடக்கப்படவில்லை), இதற்கு முன்னதான 1981ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் பெருமளவு வேறுபாடுகளைக் காட்டிய சந்தர்ப்பங்களில், மாதிரி அதற்கேற்ப சரிசெய்யப்பட்டது. (உதாரணம்: திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் நேர்காணல்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது, இதன் விளைவாக இம்மாவட்டத்தில் 100க்கும் அதிகமான நேர்காணல்கள் நடாத்தப்பட்டன).

முதலில் இம்மூன்று மாவட்டங்களிலும் முன்னோடியாக, நன்கு வடிவமைக்கப்பட்ட வினாக்கொத்து மூலம் குடும்ப விபரங்கள் திரட்டப்பட்டன. இதேபோன்ற பணியில் ஆற்றலுள்ள அல்லது முன் அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்யப்பட்ட அதே பிரதேசத்தைச் சேர்ந்த ஒன்பது விபரங்களை சேகரிப்பவர்கள் மூலம் இப்பணி நிர்வகிக்கப்பட்டது. இம்மதிப்பாய்வைத் தொடங்குவதற்கு முன்னர் மாதிரி நுட்பங்கள், தயார் செய்தல் மற்றும் நேர்காணும் ஆற்றல்கள் தொடர்பாக ஒரு நாள் பயிற்சிப் பட்டறையில் இவ்விபரம் சேகரிக்கும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

குடும்ப மாதிரியை அடிப்படையாகக் கொண்டு, மேலும் விரிவானதும் தரமானதுமான நேர்காணலுக்கான சிறுவர்களைக் கொண்ட சிறிய அளவிலான மாதிரி இனம் காணப்பட்டது. இதன்போதும் இனப்பரம்பல் முறை பேணப்பட்டதுடன், வினாக்களின் உணர்ச்சிபூர்வத் தன்மையையும், மோதலின் கால அளவையும் கருத்தில் கொண்டு 15-25 வயதிற்கிடைப்பட்ட சற்று வயதில் கூடிய சிறுவர்களே தெரிவு செய்யப்பட்டனர். பகுதியளவில் வடிவமைக்கப்பட்ட வினாக்கொத்து மூலம் நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஏற்கனவே குறிப்பிட்டது போன்று திருகோணமலையில் சிறுவர்களுடன் திட்டமிடப்பட்டிருந்த நேர்காணல்கள், 2004ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்து 26ம் திகதி ஏற்பட்ட கடற்கோள் ஏற்படுத்திய அழிவுகள் காரணமாக மேற்கொள்ளப்படவில்லை. மொத்தமாக அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் சிறுவர்களுடனான 30 நேர்காணல்கள் பூர்த்தியாக்கப்பட்டன.

5. இலங்கையின் தேசப்படத்திற்கு பின்னிணைப்பு Iஐயும், ஒவ்வொரு மாவட்டத்திலும் விஜயம் செய்த கிராமங்களின் பட்டியலுக்கு பின்னிணைப்பு II ஐ தயவு செய்து பார்க்கவும்.

*இரண்டாம் தர தரவுகள்*

இவ்வாய்வின் ஒரு பகுதியாக பிரச்சினைகளையும் அதேபோன்று இவ்விடய அறிவின் இடைவெளிகளை இனம் காண்பதற்குமாக சிறுவர் தொடர்பான ஆய்வுகள் வறுமை மற்றும் ஆயுத மோதல் தொடர்பாக ஆழமான மீளாய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இவ்வாய்வுகளின் மீளாய்வு, இலங்கையின் நிலைமைகளில் சிறுவர்கள் மற்றும் ஆயுத மோதல்கள் தொடர்பான பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதையும் நோக்காகக் கொண்டிருந்தது. மேலும், இம்மீளாய்வு கிழக்கு மாகாணத்தில் மோதல்கள் தொடர்பாக முக்கிய காரணிகளை இனம் கண்டது. இம்மீளாய்வானது, ஆயுத மோதல்களினால் சிறுவர்கள் பாதிப்படையக்கூடிய கல்வி, இடம்பெயர்வு, உடல்நலம், போஷாக்கு மற்றும் படையணிகளில் சிறுவர்களை இணைத்தல் உட்பட சிறுவர்களை பணிக்கமர்த்தல் போன்ற வேறுபட்ட பரிமாணங்கள் மீது ஆய்வின் கவனத்தைச் செலுத்த உதவியது. இலங்கையில் சிறுவர்கள் மீது ஆயுத மோதல்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றிக் கிடைக்கும் தகவல்கள், ஆழமான பகுப்பாய்வுகள் மூலமன்றி பரந்துபட்ட மட்டத்திலான ஆய்வுகளிலிருந்தே பொதுவாக எடுக்கப்படுகின்றது. இந்த ஆய்வானது, குடும்பங்கள் மற்றும் சிறுவர்கள் மட்டத்திலான நேரடி நேர்காணல்கள் மூலமாகத் திரட்டும் முதலாம்தரத் தரவுகள் தொடர்பான இடைவெளிகள் குறித்துக் கவனம் செலுத்துகின்றது.

## 3. குடும்பங்களில் மோதல்களின் தாக்கங்கள்

மோதல்களினால் சிறுவர்கள் எவ்விதம் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அறிய, அச் சிறுவர்கள் வாழ்கின்ற குடும்பங்கள் மோதல்களினால் எவ்விதம் பாதிக்கப்பட்டுள்ளன என்பதை முதலில் அறிவது அவசியமாகும். இவ்வத்தியாயமானது, குடும்பங்களையும், குடும்பங்களின் மதிப்பாய்வு மூலம் திரட்டப்பட்ட தகவல்களிலிருந்து முதலாவதாகப் பெறப்பட்ட பகுப்பாய்வுகள் மீதும் கவனம் செலுத்துகிறது.

### 3.1 கிழக்கு மாகாணத்தின் மீதான ஓர் பார்வை

இவ்வறிக்கை தயாரித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையிலும், கிழக்கு மாகாணத்தின் வறுமை நிலை தொடர்பான உத்தியோக பூர்வமான தரவுகள் பூரணமற்றதாக இருந்தமையானது, நாட்டின் ஏனைய பகுதிகளுடன் கிழக்கு மாகாண வறுமை நிலையை ஒப்பிட முடியாமல் சிரமமாக இருந்தது. போதுமானளவு தரவுகள் இல்லாத போதிலும், நாட்டின் இப்பகுதியானது ஒப்பீட்டளவில் வருமானம், அணுகும் தன்மைகள் மற்றும் உட்கட்டுமானம் போன்றவற்றில் ஊவா மாகாணத்தை[6] விட வறியதானது என்பது பொதுவில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். (அட்டவணை 3.1.1 ஐ பார்க்கவும்).

***அட்டவணை - 3.1.1 குடும்ப வருமானமும் செலவும்***

| | கிழக்கு மாகாணம் | ஊவா[7] மாகாணம் | தேசிய[8] |
|---|---|---|---|
| குடும்பத்தின் சராசரி வருமானம் (ரூபா) | 7,640 | 10,388 | 12,803 |
| மத்தியதரக் குடும்ப வருமானம் (ரூபா) | 5,500 | 6,680 | 8,482 |
| தலா வருமானம் (ரூபா) | 1,777 | 2,528 | 3,056 |
| குடும்பத்தின் சராசரிச் செலவு (ரூபா) | 10,769 | 9,352 | 13,147 |
| உணவுக்கான சராசரி குடும்பச் செலவு (%) | 58.8 | 49.1 | 44.5 |

*மூலம்:* வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் 2002/2003 இற்கான குடும்ப வருமானம் மற்றும் செலவீடுகளுக்கான மதிப்பாய்வு

கிழக்கு மாகாணத்தில் குடும்பத்தின் சராசரி வருமானம் மாதமொன்றிற்கு ரூபா 7640 ஆகும். இது சராசரி தேசிய வருமானத்தில் 60% ஆகும். கிழக்கின் குடிசனத்தொகையில் அரைவாசிக்கும் அதிகமானோர் இதைவிடக் குறைவாகவே (மாதத்திற்கு ரூபா 5500) பெறுகின்றனர். 20% மிக வறிய குடும்பங்கள் மாதமொன்றுக்கு ரூபா 1799- எனும் குறைந்த சராசரி வருமானத்தையே பெறுவதாக கணிக்கப்பட்டுள்ளது. கிழக்கிற்கான வறுமைக் கணிப்பீடுகள் இன்னமும் கிடைக்காத பொழுதிலும், முதலாம் தர தரவுகள், 50% க்கும் அதிகமான

6. பின்னிணைப்பு I இலங்கையின் தேசப்படத்தைப் பார்க்கவும்.

7. இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கிற்கு வெளியே ஊவா மாகாணம் வறிய மாகாணமாகக் கருதப்படுவதால் இங்கு ஒப்பீட்டுத் தேவைக்காகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

8. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தரவுகள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

குடும்பங்கள் தேசிய வறுமைக் கோட்டிற்குக் கீழேயே வாழ்வதாக சுட்டிக் காட்டுகிறது. (குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரவியல் திணைக்களம் (2003c, 2004a, 2004b)[9].

குடும்ப வருமானமானது குடும்பத்தின் தொழிலுடன் நெருங்கிய தொடர்புடையதாக இருந்தது. கிழக்கு மாகாணத்தில் பெரும் அளவிலான மக்கள் விவசாயம் மற்றும் மீன்பிடித் தொழிலிலேயே ஈடுபட்டுள்ளனர். இவ்விரு துறைகளுமே பாரம்பரியத் தொழில்களாக, போதியளவிலான நவீன முறைகளையும், தொழில்நுட்பங்களையும் உள்வாங்காது தொழிற்படுவதுடன், அதிகளவிலான உள்ளீடுகளையும், உற்பத்திச் செலவுகளைக் கொண்டதாக, அதேசமயம் குறைந்த உற்பத்தித் திறனையும், இலாபத்தையும் கொண்டதாகவும் காணப்படுகிறது. சூறாவளி மற்றும் வெள்ளம் போன்ற பாதகமான காலநிலைகளுக்கும் இப்பிரதேசம் உட்படுவதுடன், அவை விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகிய இரு துறைகளுக்குமே பாரிய நஷ்டத்தை ஏற்படுத்தக் கூடியவையாகும். இறுதியாக, கடந்த 20 வருடகால மோதல்களில் நடமாட்டங்களிற்கு இடப்பட்டிருந்த கட்டுப்பாடுகள், அதாவது விவசாயிகள் தங்கள் விளைநிலங்களுக்குச் செல்ல முடியாமையும், மீனவர்கள் மீன்பிடித்தலிற்கு சில நீர் நிலைகளுக்கு செல்வது தடுக்கப்பட்டமை போன்றவையும் இப்பிரதேசத்தின் பொருளாதார வீழ்ச்சிக்குக் காரணமாய் அமைந்தன.

இம்மாகாணமும் குறைந்தளவிலான உட்கட்டுமான வசதிகளால் பாதிப்புற்றிருக்கின்றது. இந்நிலைமையும் இதன் வறுமைக்குப் பங்களிக்கின்றன. வீதி அமைப்புக்கள் மோசமாக பேணப்பட்டதுடன், மோதலில் ஈடுபட்டுள்ள இரு சாராரினாலும் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த பாதை மறிப்புகள், சோதனைச் சாவடிகள், சுற்றுப் பாதைகள் மற்றும் தடைகள் என்பவற்றால் பயணித்தல் மேலும் மட்டுப்படுத்தப்பட்டது. சுகாதார சேவைகள் அநேகமாக நகர்ப்பகுதிகளிலேயே காணப்பட்டன. நாட்டின் 98.9% பிரசவங்கள் சுகாதார தொழில்சார் சேவைகளைப் பெறுகையில், இவ்வெண்ணிக்கை மட்டக்களப்பு மாவட்டத்தில் 68.6% ஆகவும், அம்பாறையில் 80% ஆகவும், திருகோணமலையில் 86% என குறைந்த மட்டத்திலேயே காணப்பட்டது. நாட்டின் சராசரியான 29% உடன் ஒப்பிடும்பொழுது இப்பிரதேசத்தின் சிறுவர்களில் 44%-53% இற்கும் இடைப்பட்ட 3 இலிருந்து 59 மாதங்கள் வரையிலான வயதுடையவர்கள் நிறை குறைந்தவர்களாகக் காணப்பட்டனர். திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சனத் தொகையில் 70% அளவிலானோருக்குச் சுத்தமான மலசலகூட வசதிகளுக்கு வழிகள் இல்லாதிருந்தது. போரினாலான வீட்டழிவுகளும், இடப்பெயர்வுகளும் அதேபோன்று வறுமையும் இதற்குரிய காரணங்களாக இருக்கலாம். (DCS 2004b)

போதியளவிலான தரவுகள் இல்லாமை, கிழக்கு மாகாணத்தில் தற்போதய வறுமை நிலை அல்லது மோதல்களினால் வறுமை நிலைகளில் ஏற்படும் தாக்கங்கள் பற்றிய முழுமையான ஓர் கலந்துரை-யாடல்களுக்குத் தடையாக இருக்கையில் வருமானம் மற்றும் அதேபோன்று ஏனைய குறிகாட்டிகள், வறுமை நிலை பரந்துபட்டளவில் உள்ளதெனும் நிலையைச் சுட்டிக் காட்டுகின்றன. மோதல்களும், வறுமையும் எவ்விதம் குடும்பங்களைப் பாதித்துள்ளன என்பதன் வேறுபட்ட பரிமாணங்களைப் புரிந்து கொள்ள குடும்ப மட்டத்திலான மதிப்பாய்வு உபயோகிக்கப்பட்டது. கீழே தரப்பட்டுள்ள, கலந்துரையாடப்பட்ட மதிப்பாய்வின் பெறுபேறுகள், குடும்பத்தாரின் பொதுவான கண்ணோட்டத்தை எடுத்துக் காட்டியதுடன் சிறுவர்களுடனான விரிவான நேர்காணல்களின் போது எழுப்பப்பட்ட பிரச்சினைகள் குறித்து மேலும் புரிந்து கொள்வதற்கான ஏதுநிலையையும் தோற்றுவித்தன.

### 3.2 மோதல்கள் தொடர்பாக குடும்பங்களின் கண்ணோட்டம்

இலங்கையில் போரானது பாரிய மனித மற்றும் பொருளாதார அழிவுகளை ஏற்படுத்துகின்ற வேளையில், அது மோதல் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களில் தொடர்ந்தும் நேரடியானதும், மறைமுகமானதுமான தாக்கங்களைக் கொண்டிருக்கிறது. "மோதல் எவ்விதம் உங்கள் குடும்பத்தைப் பாதித்துள்ளது?" எனும் கேள்விக்கு குடும்பத்தவர்கள் அளித்த பதில்களை அட்டவணை 3.2.1 காட்டுகிறது.

9. 2002ஆம் ஆண்டின் குடும்ப வருமானம் மற்றும் செலவுகளின் அளவிடுதல்களின்படி, தேசிய வறுமைக்கோடு குடும்பம் ஒன்றிற்கு ரூபா 1423- ஆகவும் குடும்பத்தின் சராசரி அளவு 4.2 ஆட்கள் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. (DCS 2003b).

*அட்டவணை 3.2.1 மோதல் எவ்விதம் உங்கள் குடும்பத்தைப் பாதித்துள்ளது?*

| குறிக்காட்டிகள் | பதில்களின் எண்ணிக்கை | குடும்பங்களின் வீதம் (%) |
|---|---|---|
| வீடு, காணி மற்றும் சொத்து இழப்பு | 254 | 85.8 |
| வருமானம் இழப்பு | 251 | 84.8 |
| குடும்பங்களின் இடம்பெயர்வு | 242 | 81.8 |
| பயணக் கட்டுப்பாடுகள் | 142 | 48.0 |
| அத்தியாவசியப் பொருட்களைப் பெற்றுக்கொள்வதிலான சிரமங்கள் | 126 | 42.6 |
| குடும்ப அங்கத்தவரின் இழப்பு | 77 | 26.0 |
| கல்வி நடவடிக்கைகள் தடைப்படல் | 71 | 24.0 |
| அங்கவீனமடைதல் | 15 | 5.1 |
| **மொத்தப் பதிலளிப்புக்கள்** | **1178**[10] | |

*மூலம்*: களத் தரவுகள் (குடும்ப மதிப்பாய்வு) 2004

சொத்து இழப்பு மற்றும் வருமான இழப்பு என்பன தெரிவு செய்யப்பட்ட மாதிரியில், குடும்பங்கள் மோதல்களில் அதிகளவில் பாதிக்கப்பட்ட முறைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. வீடுகள் அழிப்பு, ஆயுதக் குழுக்களால் சொத்துக்கள் பலவந்தமாக ஆக்கிரமிக்கப்படல், சொத்துக்களிலிருந்து உண்மையான உரித்துடையவர்கள் இடம்பெயர்வதினால் மற்றவர்கள் அங்கு குடியிருத்தல் மற்றும் நிலக்கண்ணி மற்றும் வெடிக்காத வெடிபொருட்களால் அங்கு வசிக்க முடியாமல் வீடுகளைக் கைவிடுதல் போன்றவற்றினால் குடும்பங்கள் தங்கள் சொத்துக்களை இழந்தன.

> *"1990இல், இஷா இரவுத் தொழுகைக்காக சென்ற 119 ஆண்கள் கிராமத்துப் பள்ளிவாசலில் கொல்லப்பட்டனர்....... நாங்கள் அனைவரும் வீடுகளை விட்டு பள்ளிவாசலில் தங்கியிருந்தோம். அந்தவேளை எங்களது உடைமைகள் அனைத்துமே சூறையாடப்பட்டன. வீட்டு ஜன்னல்கள்கூட கழற்றப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டிருந்தன."*
>
> *(முஸ்லிம் குடும்பம், மட்டக்களப்பு)*

சொத்து இழப்பானது வருமானமிழத்தலுடன் தொடர்புபட்டதாகும். சில சந்தர்ப்பங்களில் வருமானம் ஈட்டுகின்ற சொத்துக்களான விவசாய நிலங்கள் மற்றும் மீன்பிடி உபகரணங்கள் அல்லது விவசாயச் சேமிப்புக்கள் என்பன போரினால் அழிந்தன.

> *"நாங்கள் காமரச்சோலைக் காட்டிற்குப் போனோம் (......) நாங்கள் வீட்டில் அநேக நெல்லைக் களஞ்சியப்படுத்தியிருந்தோம். அவை எல்லாவற்றையும் இழந்தோம். ஷெல் தாக்கி நான்கு தென்னை மரங்கள் சேதமாகியதுடன் எங்களது வீடும் முற்றாகச் சேதமாகியது."*
>
> *(தமிழ்க் குடும்பம், மட்டக்களப்பு)*

50%க்கும் அதிகமான குடும்பத்தவர்கள் பதிலளிக்கையில், மோதலானது குடும்பத்தை நீண்ட காலத்திற்கு அல்லது நிரந்தரமாக இடம்பெயர வைத்துள்ளதாகக் கூறினார்கள். இம்மதிப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட குடும்பங்களில் அநேகமானவை ஏதோவொரு விதத்தில் இடம்பெயர்தலை அனுபவித் திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். சிலர் இரவுப் பொழுதுகளிற்காக வீட்டை விட்டு வெளியேறி உறவினர்களுடனோ அல்லது பாடசாலைகள் போன்ற பொது இடங்களில் தங்கி பகற் பொழுதுகளில் மட்டும் வீடுகளுக்குத் திரும்ப, ஏனைய சிலர் நீண்ட காலத்திற்கு, அநேகமாக பல வருடங்களிற்கு தங்கள் வீடுகளிலிருந்து இடம்பெயர்ந்திருக்கின்றனர். மேற்கூறிய நிலைமை மற்றும் அதேபோன்ற நிலையிலுள்ள பலரும் சுட்டிக் காட்டிய ஒரு விடயம், அவர்களது குடும்பங்கள் மீள்திரும்பும் பொழுது அவர்களது சொத்துக்கள் சேதமாக்கப்பட்டோ, சூறையாடப்பட்டோ அல்லது வேறு யாராலேனும் எடுக்கப்பட்டிருந்தது.

10. இக் கேள்வி பலவிதமான மறுமொழிகளுக்கு அனுமதிப்பதால் 303க்கும் அதிகமான பதிலிறுப்புக்கள் பதிவு செய்யப்பட்டன.

*"அநேகம் நாங்கள் காடுகளிலேயே படுத்தோம்.... தமிழ் அயலவர்கள் உட்பட எங்களது அயலவர்கள் அனைவருமே பண்ணையை விட்டு வெளியேறி விட்டோம் (........). அவர்கள் பண்ணையிலிருந்த மின்மாற்றியைத் தகர்த்து விட்டு பண்ணையிலிருந்த வாகனங்களையும், உழவு இயந்திரங்களையும் எடுத்துச் சென்றனர். கிராமத்து ஊர்காவல் படையினர் கூட பீதியினால் கிராமத்தை விட்டுப் போய்விட்டனர்."*

*(சிங்களக் குடும்பம், அம்பாறை)*

*"வவுனியா அகதி முகாமில் வாழ்க்கை கடினமாகவிருந்ததினால் 1992இல் நாங்கள் திரும்பவும் வந்தோம். நாங்கள் திரும்பி வருகையில் வீடு சேதமாக்கப் பட்டிருந்ததுடன், கிணறும் அசுத்தப்படுத்தப்பட்டிருந்தது. எங்களது பசுக்களும் காணாமல் போயிருந்தன."*

*(தமிழ்க் குடும்பம், மட்டக்களப்பு)*

### 3.3 மோதல் மற்றும் வறுமை பற்றிய கண்ணோட்டம்

குடும்பங்களினால் தரப்பட்ட தகவல்கள் அனைத்துமே, மோதல்கள் மக்களை மேலும் வறியவர் களாக்கியுள்ளது என்பதை சுட்டிக் காட்டுகிறது. அவர்கள் தங்களது வசிப்பிடங்கள், நிலங்கள் மற்றும் சொத்துக்களை இழந்தும், தங்களது வருமானத்துக்கான வழிகளை இழந்தும், அவர்களது சமூக உறவுகள் மற்றும் சமூக வலையமைப்புகளில் இடையூறுகளுடன் இடம்பெயர்ந்துள்ளனர். மோதல்கள் சீர்குலைந்து போகின்ற தன்மைக்கு இட்டுச் செல்லும் என்பதற்கான சரியான உதாரணமாக குடும்பங்கள், மோதலினால் குடும்பத்தின் பிரதான வருவாய் ஈட்டுபவரை இழக்கின்ற குடும்பங்களாகக் காணப்பட்டன.

*"எனது தகப்பனார் 1990 (........) மோதல்களின் போது இறந்தார். அவரது இறப்பு எங்கள் குடும்பத்திற்கு பெரும் இழப்பு. அன்றைய தினம் எனது தகப்பனார் வேலைக்குப் போனார், பின்னர் அவர் இறந்த செய்தி எங்களுக்குக் கிடைத்தது. எனது தகப்பனாரின் இறப்பிற்குப் பின்னர் எனது தாயார் கூலி வேலைக்குச் சென்றார்."*

*(தமிழ்க் குடும்பம், அம்பாறை)*

குடும்பத்தில் பதிலளித்தவர்கள், படகுகள், விவசாயத்திற்கான இயந்திர உபகரணங்கள் மற்றும் கோழி, ஆடுகள், மாடுகள் போன்ற கால்நடைகளின் இழப்புப் பற்றியும் எடுத்துக் கூறினர். வருமானம் ஈட்டும் சொத்துக்களான விவசாய நிலங்கள், விவசாய மற்றும் மீன்பிடி உபகரணங்கள் என்பன இழக்கப்பட, சூறையாடப்பட அல்லது சேதமாக்கப்பட/அழிக்கப்படுகையில் குடும்பங்கள் மேலும் சீர்குலைகின்றன.

*"எனது தந்தைக்கு ஒரு சிறிய படகிருந்தது. 1985 கலவரத்தின் போது அதனை யாரோ களவாடி விட்டனர். இப்பொழுது அவரிடம் சொந்தமாகப் படகு இல்லாததினால் மற்றையவர்களின் படகுகளில் கூலிக்கு வேலை செய்பவராக இருக்கிறார்."*

*(முஸ்லிம் குடும்பம், அம்பாறை)*

நெற்காணிகளை, குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலுள்ளவற்றை சென்றடைவதிலான வசதியீனங்கள் மற்றும் நிலையில்லாத பாதுகாப்பு நிலைமைகளின் காரணமாகச் சரியான காலத்தின் போது அறுவடை பண்ண முடியாமை பற்றியும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

*"பொருளாதார ரீதியில் நாங்கள் போரினால் பாதிக்கப்பட்டுள்ளோம். எங்களது நெற் செய்கைகள் பாதிக்கப்பட்டுள்ளது. எங்களால் சரியான சமயத்தில் அறுவடை செய்ய முடியாதுள்ளது. இந்நிலைமை அடிக்கடி ஏற்படுகிறது."*

*(முஸ்லிம் குடும்பம், அம்பாறை)*

அரைவாசிக்கும் அதிகமான குடும்பத்தினர், தாங்கள் அல்லது தங்களது குடும்ப அங்கத்தவர்கள் வறுமையின் காரணமாக கட்டாய இடம்பெயர்தலுக்குள்ளானதாகவும் குறிப்பிட்டனர். இது குறிப்பாக மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்ட தமிழ், முஸ்லிம் மக்களிடையே பொதுவானதோர் தாக்கமாகக் காணப்பட்டது. அநேகமாக இப்பிரதேசத்தின் பொருளாதார வளர்ச்சியின்மை, வேலை வாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை மட்டுப்படுத்தியதுடன் வறுமையுடன் தொடர்புபட்டதாகவும் இருந்தது. தொழில் தேடி புலம் பெயர்வதானது, மோதல்களற்ற பிரதேசங்களான நகர மையங்களான கொழும்பு போன்ற இடங்களையும், பொதுவாகப் பெருமளவில் கடல் கடந்து மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்வதையும் உள்ளடக்குகிறது.

குடும்பங்களது மதிப்பாய்வின் பெறுபேறுகள் அதிகமான மக்கள் மோதல்கள், வறுமை என இரண்டாலும் பாதிக்கப்பட்டிருப்பதைக் காட்டுவதுடன், இவ்விரண்டிற்குமான இடைத் தொடர்புகளை உணர்ந்து கொள்ளக்கூடியதாகவும் இருக்கின்றது. கீழுள்ள அட்டவணை 3.3.1 ஒரே விதமான தாக்கங்களிற்கு, அது மோதல் அல்லது வறுமை என இரண்டினாலுமான சொத்துக்களின் இழப்பு அல்லது அத்தியாவசியப் பொருட்களின் பற்றாக்குறை ஆகியவற்றினால் பாதிப்பிற்குள்ளான குடும்பத்தவர்களின் எண்ணிக்கையை, குடும்ப விபரங்களைக் காட்டுகிறது.

***அட்டவணை 3.3.1 மோதல்கள் மற்றும் வறுமை ஆகிய இரண்டினதும் தாக்கங்களிற்கு உள்ளானோர்***

| மோதல்களின் பாதிப்புகளிற்கானகுறிக்காட்டிகள் | வறுமையின் பாதிப்புகளுடனானஉட் தொடர்புகள் |
|---|---|
| சொத்து இழப்புக்கள் (உடைமைகள்) | 91.6% |
| அத்தியாவசியப் பொருட்களுக்கான குறைவான வழிவகைகள் | 75.8% |
| போக்குவரத்துக்கான குறைவான வழிவகைகள் | 68.3% |
| கல்வி நடவடிக்கைகளில் இடையு'றுகள் | 37.7% |
| குடும்ப அங்கத்தவரின் இழப்பு | 2.7% |

*மூலம்*: களத் தரவு (குடும்ப மதிப்பாய்வு) 2004

மேலேயுள்ள அட்டவணை, மோதல்களினால் சொத்துக்களை இழந்ததாகக் குறிப்பிட்ட 92% குடும்பங்கள், இவ்விழப்பிற்கு வறுமை ஒரு காரணமென்றும் குறிப்பிட்டுள்ளனர். அதேபோன்று அத்தியாவசியப் பொருட்களுக்குக் குறைவான வழிவகைகளைக் கொண்டிருந்த 76% குடும்பங்களும் வறுமையை ஒரு காரணமாகக் குறிப்பிட்டனர். இது மோதலிற்கும், வறுமைக்கும் இடையிலான தொடர்புகளை சுட்டிக் காட்டுகிறது. மோதல்களினால் மக்கள் சில வகைகளில் நேரடியாகத் தாக்கப் படுவதும் அவர்களை வறுமை நிலைக்கு ஆளாக்குகிறது. அவர்கள் வறிய நிலைக்கு ஆளானபின் மோதல்களுக்கு ஈடுகொடுப்பதும், அதன் தாக்கங்களின் தீவிரத்தை குறைப்பதும் மேலும் கடினமாக உள்ளதென அறிந்தனர்.

மோதலானது மக்களை ஒன்றுடனொன்று தொடர்புபட்ட பல்வேறு வகைகளில் மக்களைப் பாதித்துள்ளதாக இந்த மதிப்பாய்வு சுட்டிக் காட்டியது. அநேகமான குடும்பத்தில் பதிலளித்தவர்கள் தாங்கள் குறைந்தது ஐந்து வழிவகைகளுக்கு மேலாக மோதல்களினால் பாதிக்கப் பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டினர். மோதல்களினால் தங்கள் சொத்துக்களை இழந்ததாகக் குறிப்பிட்டவர்களில் அனேகமானோர் தங்கள் இடம்பெயர்வும் மோதல்களினாலான தாக்கத்தின் விளைவு எனக் குறிப்பிட்டனர். இதனால் குடும்பங்களும், அவர்களுடன் வாழும் சிறுவர்களும் மோதல்களினால் பல்வேறு அளவுகளில் பாதிக்கப்பட்டிருக்கையில், அம்மோதல்களின் தாக்கங்கள் ஒரே சமயத்தில் பல்வேறு வடிவங்களைக் கொண்டதாக தோன்றுகிறது.

## 4. சிறுவர்களும் ஆயுத மோதலும்

கிழக்கு இலங்கையின் சிறுவர்கள் மோதல்களினால் எவ்விதம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதைப் புரிந்து கொள்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். சிறுவர்கள் மீதான மோதலின் தாக்கங்களில் மிகவும் பிரசித்தமானதொன்றாக, குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் நடைபெறுவதாக கூறப்படுவது, குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தால் சிறுவர்கள் வலுக்கட்டாயமாக அந்த ஆயுதக் குழுவில் சேர்த்துக் கொள்ளப்படுவதென்பதாகும். போரின் அழிவுகளையோ அல்லது மிகவும் மன அதிர்ச்சிக்குள்ளாக்கும் விளைவுகளை இனம் காண்பதோ அல்லது குறிப்பிட்ட சிறுவர் குழுவினது அனுபவங்களை மட்டும் கவனத்தில் கொள்வதோ இவ்வாய்வின் நோக்கமன்று, அது கிழக்கில் அதிகளவிலான சிறுவர்களுடன் சம்பந்தப்பட்ட பொதுவான கரிசனைகளை இனங் காண்பதேயாகும். அதற்கேற்ப, பின்வரும் அத்தியாயங்கள் சிறுவர்கள் முகங் கொடுக்கின்ற பிரச்சினைகளான அவர்களின் கல்வி நடவடிக்கைகள் அதேபோன்று சிறுவர்களை வேலைக்கு அமர்த்தல், சிறுவர் சுகாதாரம், பெற்றோர் கவனிப்பு மற்றும் உதவித் திட்டங்கள் குறித்து ஆராய்கின்றது.

இவ்வத்தியாயம் குடும்பங்களுடனான மதிப்பீடு, அதேபோன்று சிறுவர்களுடன் மேற்கொண்ட நேர் காணல்களிலிருந்தும் உருவானதாகும்.

### 4.1 மோதலும் கல்வி நடவடிக்கைகளும்

நாட்டின் மனித மேம்பாட்டின் முன்னேற்றத்தில் இலங்கை இலவசக் கல்வி முறை ஓர் முக்கிய பங்கை ஆற்றியுள்ளது. தேசியளவில் கல்வியறிவு வீதம் 90மூக்கும் அதிகமானதுடன் மேலும் அதிகரிக்கின்றது. இது ஆண்கள், பெண்களிடையே ஏறத்தாழ சம அளவில் காணப்படுகின்றது. (டயஸ் பண்டாரநாயக்க 2004). எப்படியிருந்த போதிலும், இலவசக் கல்வி முறை இருந்தும் பாடசாலைக்குச் செல்லும் வயதுடைய எல்லாச் சிறுவர்களுக்கும் கல்வி முறைமைகள் சமமாகக் கிடைப்பதில்லை.

#### 4.1.1 கல்வி மட்டங்களும், பாடசாலையை விட்டு விலகுபவர்களும்

சிறுவர்கள் செயற்பாடுகள் தொடர்பாக கிடைக்கப் பெறுகின்ற மிக அண்மைக்கால மதிப்பீடாக 1999ஆம் ஆண்டு சிறுவர் செயற்பாட்டு மதிப்பீடு காணப்படுகிறது. இது, இலங்கை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்த இலங்கையின் ஏனைய மாகாணங்களில் மேற்கொள்ளப்பட்டது. இவ்வறிக்கையின்படி 5-14 வயதெல்லைக்குள் உட்பட்ட சிறுவர்களில் 97%மானோர் கல்வி நடவடிக்கைகளில் முதன்மையாக ஈடுபட்டிருக்கையில், 15-17 வயதெல்லைக்குட்பட்டோரில் 71% மானோரே இவ்வகைக்குள் உட்படுகின்றனர்[11]. இது ஒப்பீட்டளவில் வயது முதிர்ந்த குழுவினரில் அதிகமான தொகையினர், அதாவது 29%மானோர் முறைசார் கல்விச் செயற்பாடுகளிலிருந்து விலகுகின்றனர் எனக் கருதப்படுகிறது. பொருளாதாரக் கஷ்டங்கள் கல்வி நடவடிக்கைகளை இடையில் நிறுத்துவதற்கு அதிகளவில் குறிப்பிடப்படும் காரணியாகவுள்ளது. (DCS 1999)

*கிழக்கில் பாடசாலை செல்லும் 10-18 வயது வரையிலான பிள்ளைகளிற்கிடையிலான கல்வி மட்டங்கள்*

இம்மதிப்பீடு, கிழக்கின் 10-18 வயது வரையிலான சிறுவர்களிற்கிடையிலான கல்வி மட்டங்களையும், பாடசாலையை விட்டு இடைநடுவே விலகும் வீதத்தையும் குறிக்கும். அட்டவணை 4.1.1.1இல் கீழ்க் காட்டியவாறு, 10-14 வயது வரையிலானோரில் ஏறத்தாழ 89%மான சிறுவர்களும், 15-17 வயது வரையிலானோரில் 49%மான சிறுவர்களும் பாடசாலைக்குச் செல்கின்றனர். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள புள்ளிவிபரங்கள் நாட்டின் ஏனைய பகுதிகளில் குறிப்பிட்ட அளவுகளைவிடக் குறைவானதாக சிறுவர் செயற்பாட்டு மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், அவை இச்சிறுவர் செயற்பாட்டு மதிப்பீட்டில் இனம் காணப்பட்ட போக்கை உறுதிப்படுத்தின. இதன்படி அதிகளவு வீதத்திலான இளம் சிறுவர்கள்

11. இலங்கையில் 15 வயதுவரை கல்வி கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

| வயதுக் கூட்டம் | ஆண் | பெண் | மொத்தம் | சி.செ.அ (CAS) |
|---|---|---|---|---|
| 10 – 14 வயது | 87.9% | 89.1% | 88.6% | 97% |
| 15 – 17 வயது | 48.9% | 49.7% | 48.8% | 71% |

*மூலம்*: களத் தரவு (குடும்ப மதிப்பாய்வு) 2004

பாடசாலைக்குச் செல்கையில், கணிசமானளவு எண்ணிக்கையானோரே க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மற்றும் அதற்கப்பாலும் கல்வியைத் தொடர்கின்றனர்.

மேலேயுள்ள அட்டவணை பாடசாலையை விட்டு இடைநடுவே விலகும் 18 வயதிற்குக் கீழ்ப்பட்ட ஆண், பெண்களுக்கிடையே கணிசமானளவு வேறுபாடுகள் இல்லையென்பதைக் காட்டுகிறது. உண்மையில், வயது குறைந்த கூட்டத்தில் ஆண்பிள்ளைகளைவிட பெண்பிள்ளைகள் சிறிது கூடுதலானளவில் பாடசாலைக்குச் செல்கின்றனர்.


இன ரீதியில் இதனைக் கருத்திற் கொள்ளும்போது, மூன்று இனங்களிடையேயும் 10-14 வயது வரையிலான சிறுவர்களில் அதிகளவிலானோர் பாடசாலைக்குப் போகாதிருப்பதை விட பாடசாலைக்கு செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது. ஆனால் 10-15 வயது வரையிலான சிறுவர்களிடையே இது கணிசமானளவில் மாறுபட்டதாகவும், சிங்களப் பிள்ளைகளைத் தவிர்த்து, பாடசாலையிலிருந்த அநேகமான சிறுவர்கள் பாடசாலையை விட்டு விலகியும் காணப்பட்டனர்.

10-18 வயது வரையிலான மொத்த 599 சிறுவர்களுள் 70%மானோர் இன்னமும் பாடசாலையில் கல்வி கற்பதாகத் தெரிவித்தனர். 14%மானோர் தாம் 5 வருடமோ அல்லது அதற்கும் குறைவான காலமே பாடசாலையில் கல்வி கற்றதாகத் தெரிவித்தனர். அதேவேளை 9 சிறுவர்கள் அதாவது மாதிரியின் 1.5%மான சிறுவர்கள் எந்தவிதக் கல்வியறிவையும் பெறவில்லையெனத் தெரிவித்தார்கள்.

***கிழக்கிலுள்ள இளம் வாலிபர்களிடையே (19-25 வயதுவரையிலானோர்) அடையப் பெற்ற கல்வி நிலைகள்***

மோதல்களினால் கல்வி மீதான தாக்கங்களை, 19-25 வயதிலானோர் மோதல் காலங்களின் போது பாடசாலைக்குச் செல்லும் வேளைகளில் அவர்கள் அடைந்த கல்விப் பெறுபேறுகள் மூலமும் அறிந்து கொள்ள முடியும். இந்த வயதிற்குட்பட்ட கூட்டத்தினரில் அநேகமானவர்கள் தற்பொழுது பாடசாலைகளில் இல்லையாயினும், அவர்கள் அடைந்த கல்விப் பெறுபேறுகள் அல்லது பாடசாலையில் கற்ற காலம் என்பன இன்றைய வயதுப் பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்களுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு உபயோகிக்கப்படுகின்றன.

***வரைபடம் 4.1.1.2 19-25 வயது வரையிலானோர் அடையப் பெற்ற கல்வி நிலை***




மூலம் மதிப்பாய்வுத் தரவு (குடும்ப மதிப்பாய்வு) 2004

மேலேயுள்ள வரைபடம் காட்டுவதுபோல, 6% வீத அளவான இவ்வயதானோரே 5 வருடங்களிற்குக் குறைவாகவும் மற்றும் 36% வீதமானோர் 9 வருட அல்லது அதற்கும் குறைவான பாடசாலைக் கல்விக் காலத்தை கொண்டிருந்தனர். எப்படியிருந்த போதிலும் ஒட்டுமொத்தமாக 70% வீதத்துக்கு அண்மித்த அளவானோர் 10 வருடகால பாடசாலையைப் பூர்த்தியாக்க முன்னரே (க.பொ.த சாதாரண தரம் வரை) அல்லது அண்ணளவாக 17 வயதையடையும் முன்னரே பாடசாலையை விட்டு இடை நடுவே விலகி விடுகின்றனர். இளம் வாலிபர்களிடையே, அதாவது மோதல்கள் தீவிரமாயிருந்த காலத்தில் பாடசாலைக்குச் செல்லும் வயதைக் கொண்டிருந்தவர்களிடையே பாடசாலையை விட்டு இடைநடுவே விலகும் வீதம் தற்பொழுதுள்ள இளவயதினரிடையே உள்ளதைவிடக் கூடுதலாக இருந்தது. மேற்குறிப்பிட்டது போன்று 15-17 வயதுடையவர்களில் அரைவாசிக்கும் அதிகமானோர் மட்டுமே பாடசாலைகளில் இப்பொழுது இல்லை. ஆனால் 19-25 வயதுடையோரில் 70% வீதமானோர் 17 வயதிலேயே பாடசாலையை விட்டு விலகி விட்டனர்.

கல்வி மட்டங்களை அடைவதில் பால்நிலை சார்பாக சில வேறுபாடுகளுள்ளன. 5 வருடத்திற்கும் குறைவான கல்வியறிவைக் கொண்டோர் எண்ணிக்கையில் ஆண்பிள்ளைகளை விட பெண் பிள்ளைகளின் தொகை இரு மடங்காக இருந்ததுடன், எந்தவிதமான கல்வியறிவையும் பெறவில்லை எனக் கூறியோரில் மூவர் பெண்களாவர். எப்படியிருந்த போதிலும் இந்தப் போக்கு உயர் வகுப்புகளில் எதிர்மாறானதாக, அதிகளவிலான பெண்கள் ஆண்களை விட உயர்தர வகுப்புகளுக்கு சென்றுள்ளனர்.

மாவட்டங்களிற்கிடையிலும், இனங்களுக்கிடையிலும் கல்விப் பெறுபேறுகளில் கணிசமானளவு வேறுபாடுகள் காணப்பட்டன. குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் சிங்கள சமூகம், க.பொ.த சாதாரண தரத்தை அடைவதில் அநேகமாக 35% வீதத்தையும், உயர்தரத்தை அடைவதில் 50% வீதத்தையும் பெற்று மற்றைய இரு சமூகங்களான தமிழ், முஸ்லிம்களை விட ஒட்டுமொத்தமான சிறந்த பெறுபேறுகளை கல்வித் துறையில் அடைந்துள்ளனர். சிங்களவரிடையே, ஒட்டுமொத்தமாக 86% வீதத்திற்கும் அதிகமானோர் 10-13 வருடங்களிற்கு இடையிலான கல்வியறிவைப் பூர்த்தி செய்துள்ளதுடன், 1% வீதத்துக்கும் குறைவானோரே 5 வருடத்துக்கு குறைவான கல்வியறிவைப் பெற்றுள்ளனர். இதற்கு மாறுபட்டதாக, இதன் அரைப்பங்கிற்கும் குறைவான தமிழ், முஸ்லிம் இனங்களைச் சார்ந்தவர்களே 10-13 வருடங்களிற்கு இடையிலான கல்வியாண்டுகளைப் பூர்த்தி செய்துள்ளனர். சுமார் 10% முஸ்லிம்கள் 5 வருடத்திற்கும் குறைவான கல்வியாண்டுகளைக் கொண்டிருந்ததுடன் இதில் அநேகமானோர் பெண்களாகவும் காணப்பட்டனர்.

இனங்களுக்கிடையிலும் மற்றும் மாவட்டங்கள் முழுவதிலுமான இந்த வேறுபாடுகள் வறுமை மற்றும் அதேபோன்று வன்முறைகள் மோதல்களுடன் தொடர்பாகவும் இருக்கலாம். அம்பாறை மாவட்டத்தில் வாழ்கின்ற சிங்கள மக்கள் பூகோளமைப்பு ரீதியில் வன்முறைகளிற்கு அப்பால் உள்ளனர், உண்மையில் சொல்லப் போனால் அம்பாறை நகரம் ஒருபோதும் தாக்கப்படவில்லை. எனினும் இந்த சர்ச்சை இவ்வாய்வின் எல்லைக்கு அப்பாற்பட்டதுடன் இது பற்றிய மேலதிக ஆராய்ச்சிகள் இவ்வித வேறுபாடுகள் முக்கியமானவையா, அப்படியாயின் ஏன் எனத் தீர்மானிப்பதில் பயனுள்ளவையாக இருக்கலாம்.

பாடசாலையை விட்டு இடைநடுவே சிறுவர்கள் விலகுவது குறித்து வினவியபொழுது, அதிகமான சந்தர்ப்பங்களில் குறிப்பாக சிறுவர்கள் தங்கள் இளவயதிலேயே பாடசாலையிலிருந்து விலகுவதற்கான காரணமாக வறுமையே எனக் குறிப்பிட்டனர்.

> *"எனது தந்தை இறந்த பின்னர் வருமானத்தை ஈட்டுவதற்கோ அல்லது குடும்பத்தைப் பராமரிப்பதற்கோ யாருமில்லாததால் நான் எனது கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்த தீர்மானித்தேன்."*
>
> *(தமிழ் - ஆண் 24 வயது)*

வயது முதிர்ந்த சிறுவர்களிடையே, க.பொ.த. சாதாரண தரத்தின்பின் கல்வியைத் தொடர அல்லது தொழிற் பயிற்சியை பெறுவதற்கான செலவுகளைப் பூர்த்தி செய்ய நிதி வசதியின்மை காரணமாக பலர் இடைநடுவே விலகினர். இக் கல்வி நிலையங்கள் அநேகம் அவர்களது கிராமங்களிற்கு அண்மையில் அமைந்திருக்காதது, அதிகரித்த பிரயாணச் செலவுகளையும் அல்லது தங்கி இருப்பதற்கான செலவுகளையும் ஏற்படுத்தியது.

சில சந்தர்ப்பங்களில், கல்வியில் ஓர் குறிப்பிட்ட மட்டத்தைக் குடும்பத்தின் மூத்த சிறுவர்கள் அடைந்த பின்னர், தங்களது இளைய சகோதரர்கள் அடிப்படைக் கல்வியைப் பெறுவதற்கு ஏதுவாக வழிவிட்டும் பாடசாலையிலிருந்து விலகினர்.

*"எனது இரட்டைச் சகோதரி க.பொ.த. சாதாரண தரத்தின் பின்னர் பாடசாலைக்குச் செல்வதை நிறுத்த வேண்டியதாயிற்று, ஏனெனில் எங்கள் இருவரையும் கற்பிப்பதற்கான செலவுகளுக்கு எனது பெற்றோரால் இயலாமல் இருந்தது. அவர்கள், தங்கள் ஒரு மகளையேனும் படிக்க வைக்க எண்ணினர், அது நானாவேன்."*

*(முஸ்லிம் - பெண் 22 வயது)*

உடல்நலம், அங்கவீனம் மற்றும் திருமணம் போன்றனவும் கல்வியை விரைவில் இடைநிறுத்து வதற்கான காரணங்களாக குறிப்பிடப்பட்ட போதிலும் அவை மோதல் மற்றும் வறுமை தொடர்பான காரணங்களை விட குறைவானதாகவே காணப்பட்டது. சில கிராமங்களில், சில சமூகங்களில் (முஸ்லிம் சமூகம் போன்றவை) கலாச்சார இடையூறுகள், ஆண், பெண் வேறுபாடுகளும் சிறுவர்கள் பாடசாலையை விட்டு இடைநடுவே விலகுவதற்கான காரணங்களாக குறிப்பிடப்பட்டன.

*"நானும், எனது சகோதரிகளும் நிதி வசதியின்மையால் பாடசாலைக்குப் போவதை நிறுத்தினோம். எனது இளைய சகோதரன் மட்டுமே பாடசாலையில் கற்கிறான். அவனிற்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது."*

*(முஸ்லிம் - பெண் 19 வயது)*

முறையற்ற வகையில் பாடசாலையை விட்டு இடைநடுவில் இச்சிறுவர்கள் விலகியதென்பது அவர்கள் தரமானதோர் கல்வியைப் பெற்றுக் கொண்டுள்ளார்களோ அல்லது பெற்றுக் கொண்டிருக்கிறார்களோ என்பதல்ல. இதைக் கணிப்பதற்கு மேற்குறிப்பிடப்பட்ட எண்ணிக்கைக்கு அப்பாற் செல்லுதல் வேண்டும்.

### 4.1.2 கல்வித் தரம்

மோதல் பிரதேசங்களில் உயர்ந்த தரத்தைக் கொண்ட கல்வியை அளிப்பதற்கான சாதகமான நிலைமைகள் இல்லை. மோதல் வேளைகளின் போது பாதுகாப்புக் காரணங்களினாலும், பயணக் கட்டுப்பாடுகள் காரணமாகவும் பாடசாலைக்குச் செல்வதென்பது முடியாததாகி விடுகிறது. சில சமயங்களில் இராணுவம் அல்லது அகதிகள் பாடசாலைக் கட்டிடங்களை ஆக்கிரமித்துக் கொள்கின்றனர். மோதல்கள் தீவிரமாக உள்ள பிரதேசங்களில் முறையான நிர்வாகக் கட்டமைப்புக்களில் ஓர் நெகிழ்ச்சிப் போக்கை அநேகமாகக் காணக்கூடியதாக உள்ளதால், பாடசாலையை விட்டு இடைநடுவில் விலகுபவர்கள் குறித்து குறைவான கண்காணிப்புக்களே உள்ளது. ஆசிரியர்களும், ஏனைய பாடசாலை ஊழியர்களும் பாதுகாப்புக் காரணங்களினால் வேலைக்கு சமூகமளிக்காதிருக்கலாம். மோதல்களின் காரணமாக பாடசாலை நாட்கள் இழக்கப்பட்டு, பாடத்திட்டங்கள் பூர்த்தியாக்கப்படாமல், பரீட்சைகளும் உரிய காலத்தில் நடாத்தப்படாமலும் இருந்திருக்கலாம்.

*"1995-2000 வரை போரினாலும், குழப்பங்களாலும் பாடசாலை அநேகமான நாட்களுக்கு மூடிக் கிடந்தது. ஆசிரியர்கள் பாடசாலையை மூடிச் சிறுவர்களைப் பெற்றோரிடம் கையளித்தனர்."*

*(சிங்களம் - ஆண் 20 வயது)*

கிழக்கில் பொதுவாக நடைபெறுகின்ற ஹர்த்தால் மற்றும் ஊரடங்குச் சட்ட அறிவிப்புக்களால் பாடசாலை வரவுகள் ஒழுங்கற்றதாக இருக்கலாம். போக்குவரத்துப் பிரச்சினைகளும், பிரயாணக் கட்டுப்பாடுகளும் பாடசாலைக்குச் சமூகமளிப்பதில் தடையாக இருந்தது என சிறுவர்கள் குறிப்பிட்டனர். போரிடுகின்ற சாராரினால் இலக்கு வைக்கப்படலாம் என்ற பீதி பெற்றோர்களை சிறுவர்களைப் பாடசாலைக்கு அனுப்பி அபாயத்திற்குள்ளாக்குவதை விட அவர்களை வீட்டிலேயே நிறுத்தி வைக்க நிர்ப்பந்தித்தது. அநேகமான சந்தர்ப்பங்களில் சிறுவர்கள் தனித்துப் பாடசாலைக்குச் செல்லவில்லை, மாறாக அவர்கள் கூட்டமாக அல்லது தந்தையார் போன்ற பெரியவர்களின் துணையுடனேயே பாடசாலைக்குச் சென்றனர். இந்த ஏற்பாடுகள் இல்லாதபோது சிறுவர்கள் பாடசாலை நாட்களை இழந்திருக்கலாம்.

*"ஒரு தாக்குதல் நடைபெற்றதாக கேள்வியுற்ற போதிலெல்லாம், என் தந்தையார் என்னைப் பாடசாலை செல்ல அனுமதிப்பதில்லை, ஏனெனில் மோதல்களின் போது இடைநடுவே நாம் அகப்பட்டுக் கொள்ளலாம் என அவர் அச்சம் கொண்டிருந்தார்."*

*(முஸ்லிம் - பெண் 20 வயது)*

---

12. கடைகள், பாடசாலைகள், வேலைத்தளங்கள் என்பன மூடப்பட்டு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதிகளும் இணைந்ததாக மக்களினால் காட்டப்படும் எதிர்ப்பு உணர்வுகள் ஹர்த்தால் எனப்படும்.

மோதல்களின் நேரடியான விளைவுகளை விட, அபிவிருத்தியடையாத உட்கட்டுமானம் மற்றும் ஒழுங்கற்ற அல்லது மட்டுப்படுத்தப்பட்ட பொதுப் போக்குவரத்து வசதிகள் போன்ற மறைமுகத் தாக்கங்களும் சிறுவர்களுக்குப் பிரச்சினைகளை உண்டுபண்ணின.

> *''கிராமத்துப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தரம் வரைக்குமே கல்வி கற்க முடியும். உயர்தர வகுப்பிற்காக 2 கி.மீ தொலைவிலுள்ள செங்கலடிக்கு நான் செல்ல வேண்டும். நான் துவிச்சக்கர வண்டியிலேயே செல்ல வேண்டும். பஸ்சுக்கான கட்டணம் ரூபா 5-, ஆனால் பஸ் பாடசாலைக்கு அருகாமையாக செல்லமாட்டாது.''*
>
> *(தமிழ் - பெண் 16 வயது)*

பாடசாலையைச் சென்றடைவதிலான பிரச்சினைகளுக்கு மேலதிகமாக, அவர்களது பாடசாலைகளில் நூலகங்கள், ஆய்வுகூடங்கள் மற்றும் வேறு வசதிகளின் பற்றாக்குறை மற்றும் தரமான ஆசிரியர்களின்மை போன்ற மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் குறித்தும் சிறுவர்கள் குறிப்பிட்டனர். இப் பிரதேசத்திலுள்ள அநேகமான பாடசாலைகள் ஆண்டு 9 அல்லது ஆண்டு 11 மட்டிலுமான வகுப்புகள் வரையிலுமே கல்வி நடவடிக்கைகளை அளிக்கின்றன. உயர்தர வகுப்புகளுக்காக கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இருப்பின் அவை கலைத்துறைக்கு மட்டுமே வழமையாக மட்டுப் படுத்தப்பட்டுள்ளது. அநேகமான சிறுவர்கள் நகரப் பகுதிகளிலுள்ள பெரிய பாடசாலைகளுக்கோ அல்லது பெரிய கிராமங்களுக்குத் தங்கள் கல்வியைப் பூர்த்தி செய்வதற்காகப் பயணிக்கின்றனர். இந்நடவடிக்கைக்காக, பிரயாணச் செலவு மற்றும் பிரயாணத்திற்குச் செலவிடும் நேரம் என மேலதிகச் செலவுகளை ஏற்படுத்துவதுடன் அநேகம் இதுவொரு அசாதாரணத் தன்மையை உணர்த்துகிறது.

> *''பாடசாலையில் கலைத்துறை மட்டுமே இருந்ததால் அதையே நான் படிக்க வேண்டியிருந்தது. தத்துவவியல் பாடம் எனக்கு மிகக் கடினமாக இருந்தது. அதனால் என்னால் க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சித்தியடைய முடியவில்லை, தத்துவவியல் பாடத்தில் என்னால் சித்தியடைய முடியவில்லை''*
>
> *(தமிழ் - ஆண் 21 வயது)*

மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்கள் மூலம் சிறுவர்கள் அல்லது இளம் வாலிபர்கள் வறுமைக்கு அடுத்தபடியாக தங்களால் க.பொ.த. சாதாரண தரத்தைத் தாண்டி கல்வியைத் தொடர முடியாமைக்கு பொதுவாக தெரிவித்த இரண்டாவது காரணம், அவர்களால் க.பொ.த. உயர்தரத்திற்குத் தேவையான பெறுபேற்றை அடைய முடியாமல் போனதென்பதாகும். இது, அச்சிறுவர்களின் திறமையைப் பொறுத்தவரை கிடைக்கப் பெற்ற குறைந்த தரத்திலான கல்வியினாலானதாக இருக்கலாம்.

> *''எனது க.பொ.த. சாதாரண தரப் பெறுபேறுகள் உயர் தரத்தைத் தொடர்வதற்குப் போதுமானதாக இருக்கவில்லை. எனவே, எனது கல்வியைத் தொடராதிருக்கத் தீர்மானித்து என் தந்தையாருடன் வியாபாரத்தில் இணைந்து கொண்டேன்.''*
>
> *(முஸ்லிம் - ஆண் 21 வயது)*

மோதல் காலத்தின் போது அடிக்கடி ஏற்பட்ட இடம்பெயர்வுகளினாலும் சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டன. பல சிறுவர்கள் பல மாதங்கள்வரை இரவில் காட்டில் மறைந்திருந்த காலங்களைத் திரும்ப எண்ணிப் பார்த்தனர். அக்காலங்களில் அவர்களது கல்வி முற்றாகத் தடைப்பட்டது. நீண்ட காலத்தை அகதி முகாம்களில் கழித்த சில சிறுவர்கள் இடம்பெயர்ந்து இருக்கையில் தற்காலிகப் பாடசாலைகளுக்குச் சென்று வந்துள்ளனர். எப்படியிருந்த போதிலும் முகாம்களின் அமைவு கற்றலுக்கோ அல்லது கற்பித்தலுக்கோ எப்பொழுதும் இடையூறாகவே இருந்தது.

> *''1990 இல் நாங்கள் அகதி முகாமில் 3 வருடங்களாக இருந்தோம். அப்போது எந்தவிதப் பிரச்சினைகளுமின்றி எங்கள் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ந்தோம். ஆயினும் அப்பொழுது கற்பதற்குக் கடினமாக இருந்தது.''*
>
> *(தமிழ் - ஆண் 23 வயது)*

சிறுவர்கள் மற்றும் அவர்கள் குடும்பங்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட இவ்விடையூறுகளால் அவர்களது முன்னேற்றத்திற்கான வாய்ப்புக்கள் இழக்கப்படுகின்றன. இது சிறுவர்களில் ஓர் உணர்வு பு ர்வமாக பாதகமான விளைவுகளைக் கொண்டிருக்கலாம். இந்நிலைமையானது, கற்பதில் ஆர்வமின்மை அல்லது எதுவும் நின்று நிலைக்காத ஒரு சூழ்நிலையில் எதையாவது அடைய வேண்டும் எனும் அவா போன்ற பல்வேறு தொடர் விளைவுகளுக்கு இட்டுச் செல்லலாம். பாதுகாப்பின்மையும், பீதி போன்ற பொதுவான நிலைமைகளும் சிறுவர்களின் பாடசாலை மீதான கவனத்தையும் ஈற்றில் அவர்கள் பெறும் கல்வியின் தரத்தையும் பாதிக்கிறது. (பெட்டகம் 1 ஐ பார்க்கவும்)

***பெட்டகம் 1: "இரவில் விளக்கைப் போட்டு எங்களால் படிக்க முடியவில்லை."***

*காயத்திரியினது[13] குடும்பம் ஒரு கால் ஏக்கர் நெற்காணியில் விவசாயத்தை வேறு பல குடும்பங்களுடன் செய்து கொண்டும் தங்கள் வருமானத்திற்கு உதவியாக செங்கல் தயாரித்தும், கூலி வேலை செய்தும் வாழ்ந்தனர். காயத்திரி தனது உயர்தரப் பரீட்சையை அண்மையிலேயே முடித்தார்.*

*மோதல்கள் நடைபெற்ற வருடங்களில் அவர்களது கிராமம் வன்முறைகளுக்கு மிகவும் முகம் கொடுத்தது. அவர்களது கிராமம், அம்பாறை மாவட்டத்தில் சிங்கள-தமிழ் பகுதிகளின் எல்லையில் அமைந்திருந்ததினால் கிராமத்தவர்களுக்கு அதிகளவிலான கஷ்டத்தைக் கொடுத்தது. 1990 இலிருந்து 2000 ஆண்டுவரை நிகழ்ந்த தாக்குதல்களில் அபாய ஒலிகளின் தொடர்ச்சியான எச்சரிக்கையுடன் ஓர் நிச்சயமில்லாத வாழ்வைக் கழித்தனர். பல சந்தர்ப்பங் களில் இரவு வேளைகளில் சமைக்கும் பொழுது அல்லது உணவு உட்கொள்ளும் வேளைகளில் காடுகளிற்குள் அல்லது மேலும் சிங்களப் பகுதிகளுக்குள் ஓட வேண்டியிருந்தது. பல வருடங்களாக அவர்களது குடும்பம் இரவு வேளைகளில் அவர்கள் வீட்டில் உறங்கவில்லை, மாறாக மேலும் உட்பகுதிகளில் அமைந்துள்ள அவர்களது உறவினர்களது வீடுகளிலேயே உறங்கச் சென்றனர்.*

*போரினால் தனது வாழ்க்கையில் அநேகமாக தன்னால் சரியாகக் கற்க முடிய வில்லையென காயத்திரி கூறினார். வீட்டினுள் விளக்குகளை ஒளிரவிட மிகவும் பயந்ததினால் எந்தச் சிறுவர்களாலும் படிக்க முடியவில்லை. வீட்டிலும் அதேபோன்று பாடசாலையிலும் தான் இவ்விதம் தொடர்ச்சியாக அச்சத்துடன் இருந்ததாக காயத்திரி கூறினார்.*

## 4.2 மோதலும் சிறுவர் உழைப்பும்

சிறுவர் செயற்பாட்டு மதிப்பாய்வில் (சி.செ.ம) முன்னர் குறிப்பிட்டது போன்று, இலங்கையில் அதிகளவிலான சிறுவர்கள் கல்விக்குப் புறம்பான நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றார்கள். வீட்டு வேலை, குடும்பத்தின் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு உதவியாக கூலித் தொழிலாளியாகவும் மற்றும் வேதனமில்லாத தொழிலாளியாகவும் உள்ளது போன்ற ஏனைய செயற் பாடுகளில் சிறுவர்கள் ஈடுபடுவதற்கான காரணங்களை கிழக்கின் மோதல் நிலைமைகள் கொண்டுள்ளனவா என்று புரிந்து கொள்வதை இவ்வத்தியாயம் நோக்குகின்றது. மோதல் அதே போன்று வறுமை என்பன சிறுவர்களின் தொழில் நடவடிக்கைகளில் எவ்விதம் செல்வாக்குச் செலுத்து கின்றது என்பதை இனம் காண்பது இவ்வத்தியாயத்தின் நோக்கமாகும்.

இலங்கையில் இலகு தொழில் புரிவதற்கான குறைந்தபட்ச வயது 15 ஆகும்,[14] ஆனால் சி.செ.ம அறிக்கையின் படி 90% வீதமான இளம் சிறுவர்கள் (5-14 வயதினர்) 'பாடசாலைக்குச் செல்கையிலேயே சில வகையான பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார்கள்' எனக் குறிப்பிடுகிறது. (DCS 1999:11). வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தவிர்த்து ஏனைய அனைத்து மாகாணங் களையும் உள்ளடக்கிய இம்மதிப்பாய்வு, பாடசாலைக்குச் செல்கையிலேயே பொருளாதாரச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள சிறுவர்களில் சுமார் 74% வீதமானோர் விவசாய நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கிறது.

1% வீதத்திற்கும் குறைவான மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான, இந்த வயதெல்லைகளுடைய சிறுவர்கள், பொருளாதார நடவடிக்கைகளில் மட்டும் ஈடுபட்டுள்ளனர். அதாவது அவர்கள் பாடசாலைக்குச் செல்வது இல்லை. எனினும் 15-17 வயது வரையிலான குழுவினரில் ஒப்பீட்டளவில் குறைந்தளவிலான 30% வீதத்தினரே பாடசாலை செல்கையில் பொருளாதார நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதாக குறிப்பிடப்படுகிறது. நுகர்வோர் நிதி மற்றும் சமூக, பொருளாதார மதிப்பாய்வின் 2003/04 (CFS) ஆரம்ப முடிவுகளின்படி 14-18 வயது வந்தவர்களுள் 35% வீதமானோரே வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கையில்[15] 19-25 வயது வந்தவர்களுள் ஆக 28.6% வீதமானோரே வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாக கருதப்படுகிறது. (டயஸ் பண்டாரநாயக்க 2004).

13. பதிலளித்தவரின் அநாமதேயத்தைப் பேணுவதற்காக பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.

14. இலங்கை, சிறுவர் தொடர்பான அனைத்துப் பிரதான சமவாயங்கள் மற்றும் சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தின் (ILO) சிறுவர் தொழில் பிரச்சினைகள் சம்பந்தமான பணிப்புரைகள் (ILO 38, குறைந்த பட்ச வயதுத் தேவை மற்றும் ILO 192, சிறுவர் தொழிலின் மோசமான வகைகள்) அதுபோன்று சிறுவர் உரிமைகளுக்கான சமவாயம் (CRC) 1990 மற்றும் ஆயுத மோதல்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மீதான விருப்புரிமைசார் பட்டயம் 2000 என்பவற்றில் கையொப்பதாரியானதால் அச்சட்டங்களை அமுல் படுத்தும் கடப்பாட்டைக் கொண்டுள்ளது.

15. குடும்ப உறுப்பினர் ஒரு மணித்தியாலத்திற்கு மேலாக ஊதியம் பெறும் ஊழியராக பணி புரிகையில், தொழில் தருநர், சொந்தப் பணிபுரிபவர் (சுயதொழில் செய்பவர்) அல்லது மேற்கூறப்பட்ட காலப்பகுதியில் ஊதியம் பெறாத ஊழியராகப் பணி செய்யும் குடும்ப உறுப்பினர், பணிக்கு அமர்த்தப்பட்டதாக கருதப்படுவர் என நுகர்வோர் நிதி மற்றும் சமூகப் பொருளாதார மதிப்பாய்வு 2003/04 (CFS) குறிப்பிடுகிறது. (டயஸ் பண்டாரநாயக்க, 2004:7)

கிழக்கிலும் கூட, குடும்பத்தின் பொருளாதார நடவடிக்கைகளில் சிறுவர்கள் பல வழிகளில் பங்களிப்பதாக, குடும்பத்துடனான மதிப்பாய்வின் பெறுபேறுகள் சுட்டிக் காட்டுகின்றன. மதிப்பாய்வு செய்யப்பட்ட அநேகமான எல்லா வீடுகளிலுமே ஏதோவொரு வகையில் சிறுவர்கள் ஊதியமில்லாத வீட்டுப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பெண்கள் பெருமளவில் வீட்டு வேலைகளான சமையல், சுத்தப்படுத்தல் மற்றும் பிள்ளைப் பராமரிப்புக்களில் ஈடுபடுகின்றனர். ஆண்பிள்ளைகள் அதிகளவில் தோட்டங்கள் அல்லது வயல் வேலைகளிலும் கால்நடைகளை பராமரிப்பதில் உதவுவதுமாகப் பங்களிக்கின்றனர். சிறுவர்களது செயற்பாடுகள் ஆண்பெண் வேறுபாட்டால் இறுக்கமாக வேறுபடுத்தப் பட்டிருப்பினும், பிள்ளைப் பராமரிப்பு மற்றும் சமையல் என்பன அதிகளவில் பெண்பிள்ளைகளாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

*"ஒரு வாரத்தில் மூன்று நாட்கள் நகரில் விஞ்ஞான பாடத்திற்கான தனியார் வகுப்புகளுக்கு (டியூசன்) சென்றேன். மற்றைய நாட்களில் எனது தாயாரிற்கு வீட்டு வேலைகளில் உதவி செய்தேன். நான் ஒவ்வொரு நாளும் சோறு சமைத்தேன்."*

*(முஸ்லிம் - பெண் 15 வயது)*

சிறுவர்களால் செய்யப்படும் வேலைகள் சம்பந்தமான நேரடிக் கேள்விகள், அவர்கள் செய்கின்ற வீட்டு வேலைகளின் தன்மைகள் குறித்து சுட்டிக் காட்டியது. ஆயினும் அவ்வேலைகளின் அளவு ஒரு போதும் தெளிவாக இருக்கவில்லை. சிறுவர்களுடனான நேர்காணலின் போது, வீட்டு வேலைகளுக்காக சிறுவர்கள் செலவிடும் உண்மையான நேர அளவைக் கண்டறிவதற்காக, அவர்களுடனான நேர்காணலின் போது சிறுவர்களின் நாளாந்த நடவடிக்கைகள் பற்றி விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

*"எனது க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்கு இன்னமும் மூன்று மாதங்களே இருப்பதால், நாள்தோறும் சுமார் 2-3 மணித்தியாலங்கள் படிப்பதற்கு நான் முயற்சிக்கிறேன். எனது தாயார் மத்திய கிழக்கு நாட்டில் பணிபுரிவதால், காலைச் சாப்பாடு, மதியம் மற்றும் இரவு உணவுக்கான சமையல், துடைத்துப் பெருக்குதல் மற்றும் குடிப்பதற்கு தண்ணீர் அள்ளி வைத்தல் போன்ற எல்லா வீட்டு வேலைகளையும் நான் செய்கிறேன். பாடசாலை நாட்களில் நான் காலையில் 4 மணிக்கு எழும்பி இரவு 11 மணிக்கே நித்திரைக்குச் செல்கிறேன்."*

*( சிங்களம்- பெண் 16 வயது)*

இந்தப் பெண்பிள்ளை அதிகளவிலான நேரத்தை வீட்டு வேலைகளிற்காகச் செலவிடுவதால் உண்மையில் நாளொன்றுக்கு ஒரு மணித்தியாலத்திற்கும் குறைவான நேரமே படிப்பிற்காக அவளால் ஒதுக்க முடிகிறது. சிறுவர் செயற்பாட்டு மதிப்பாய்வுத் தரவுகள் சுட்டிக் காட்டுவது போன்று இலங்கையில் அநேகமான சிறுவர்கள் வீட்டு வேலைகளில் ஈடுபட்டுள்ளதனால் கிழக்கு மாகாணத்திலுள்ள சிறுவர்களும் வீட்டுவேலைகளில் அதிகளவான நேரத்தினைச் செலவிடுவதென்பது ஒன்றும் அசாதாரண விடயமல்ல. இருந்தபோதிலும், சிறுவர்களின் கற்றல் நடவடிக்கைகளும் மற்றும் அபிவிருத்தியும் பாதிப்படையாவண்ணம் இவற்றுக்கிடையே ஓர் சமனிலை பேணப்படுதல் வேண்டும்.

அநேகமான சிறுவர்கள் வீட்டுவேலைகளை தங்களது கல்வி நடவடிக்கைகளுடன் கையாள்கையில், ஒரு சில சிறுவர்கள் ஊதியம் பெறும் வேலைகளைத் தங்கள் கல்வி நடவடிக்கைகளுடன் இணைந்து புரிவதைப் பற்றியும் கூறினார்கள். இது வயதுகூடிய சிறுவர்களிடையே பொதுவாகக் காணப்பட்டது. அவர்கள் குறிப்பிடுகையில், நெல் அறுவடைக் காலங்களில் உதவுவது மற்றும் தனியார் வகுப்புகள் எடுப்பது போன்ற வழிகள் மூலம் தங்களது குடும்பத்தாரின் வருவாய்க்கு உதவுவதாகச் சொன்னார்கள்.

*"எனது மைத்துனர் ஒருவர் தொழில் நுட்பவியலாளர். சில சமயம் நான் அவருக்கு உதவிக்குச் செய்வேன். நாளொன்றுக்கு ரூபா 200- இலிருந்து ரூபா 300- வரை அவர் எனக்கு ஊதியமாகத் தருவார். நான் அதை எனது புத்தகங்களை வாங்குவதற்காகச் செலவு செய்வேன்."*

*(தமிழ் - ஆண் 21 வயது)*

சில சிறுவர்கள், பாடசாலைக்குச் செல்லாது முழுநேர ஊதியம் பெறும் வேலைகளில் ஈடுபட்டுள்ளார்கள். மதிப்பாய்வு செய்த மூன்றிலொரு குடும்பத்தில் குறைந்தது ஒரு பிள்ளையாகிலும் முழுநேர வருமானம் ஈட்டும் செய்கையில் ஈடுபட்டுள்ளனர். பாடசாலையை விட்டு இடைநடுவே விலகிய அநேகமான சிறுவர்கள் குறைந்த கல்வித் தராதரத்தையே கொண்டிருப்பதனால் அவர்கள் கூலி வேலை போன்ற குறைந்த திறனுள்ள, குறைந்த ஊதியம் பெறும் வேலைகளிலேயே ஈடுபட வேண்டியுள்ளது.

மோதலின் காரணமாக பிரதானமாக குடும்ப வருவாயை ஈட்டுபவரின் இழப்புகள் போன்ற மோதல் மற்றும் வறுமை தொடர்பான காரணங்களினாலேயே சிறுவர்கள் ஊதியம் பெறும் பணிகளில் ஈடுபடுகின்றனர் எனக் குடும்பங்களிலுள்ள அநேகமானோர் தெரிவித்தனர்.

*"போரில் எனது தந்தை கொல்லப்பட்டார். கொழும்புக்கு அண்மித்த பாடசாலையொன்றுக்குச் செல்வதற்கு எனக்குப் புலமைப்பரிசில் கிடைத்தது. ஆயினும் ஒரு தடைவ விடுமுறையில் நான் வீட்டிற்கு வந்த பொழுது வீட்டில் எனது தாயார் மற்றும் சகோதரியும் இருந்த நிலைமையைக் கண்டு பாடசாலைக்குச் செல்வதை இடைநிறுத்த நான் தீர்மானித்தேன். இப்பொழுது என்னிடம் சிறிய மரவேலைப் பட்டறையொன்று உண்டு."*

*(முஸ்லிம் - ஆண் 22 வயது)*

கூலி வேலையைத் தவிர, சிறந்த உத்தியோகம் தேடுவது கடினமாகவுள்ளது என பாடசாலையை விட்டு இடைநடுவே விலகிய சிறுவர்கள் குறிப்பிடுகின்றனர். சில சிறுவர்களால் வேலை எதனையுமே தேடிக் கொள்ள முடியாது வீட்டிலேயே உள்ளனர். எப்படியிருந்த போதிலும், ஊதியம் பெறும் வேலைகளில் ஈடுபடுவதற்காக பாடசாலையை விட்டு இடைநடுவில் விலகிய சிறுவர்களில் பலர் புதிய தொழில் திறன்களைக் கற்பதில் குறிப்பிடத்தக்க ஈடுபாட்டைக் காட்டியும், சில சமயங்களில் தமது சொந்த வியாபாரங்களையே (பெட்டகம் 2ஐப் பார்க்கவும்) ஸ்தாபித்துள்ள சந்தர்ப்பங்களையும் எமது ஆய்வுக் குழு கண்டறிந்தது. பலவருட கடும் ஊழியத்தின் பின் ஓர் நிரந்தரமான வருவாயை உறுதிப்படுத்திக் கொண்டவர்கள் தங்களால் கல்வியைத் தொடர முடியாமை குறித்துக் கவலையடைவதாகத் தெரியவில்லை.

***பெட்டகம் 2: "எனது முதல் வேலை மாதமொன்றுக்கு ரூபா 200ஐத் தந்தது."***

*குமாரவிற்கு[16] 10 வயது இருக்கையில் அவனது தந்தை காணாமல் போனார்.*

*போரிற்கு முன்னர் குமாரவின் குடும்பம் சுமாரான நல்ல நிலையில் இருந்தது. அவர்களுக்கு 4 ஏக்கர் நெற்காணி இருந்ததுடன் அவனது தந்தையார் மாட்டு வண்டியொன்றையும் சொந்தமாகக் கொண்டிருந்தார். ஒரு நாள் தமிழீழ விடுதலைப் புலிகள் வந்து அவனது தகப்பனாரிடம் ஒரு வண்டி கற்களை ஏற்றித் தரும்படி நிர்ப்பந்தித்ததாக அவன் கூறினான். இச் சம்பவத்தின் பின் இராணுவம் அவனது தந்தையாரை தமிழீழ விடுதலைப் புலிகளிற்காக வேலை செய்வதாகக் கூறி சந்தேகத்தில் பிடித்துச் சென்றனர். அதன் பின்னரிலிருந்து அவனது குடும்பம் தந்தையாரைக் காணாததுடன் அவர் இராணுவத்தால் கொல்லப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கின்றனர்.*

*தந்தையார் காணாமல் போனதின் 3 வருடத்தின் பின் குமார பாடசாலையிலிருந்து விலகி ஓர் வேலை தேடுவதற்கு தீர்மானித்தான். தன் நண்பன் ஒருவன் மூலம் அவன் தேடிக் கொண்ட முதல் வேலையான கூலித் தொழில் மாதமொன்றுக்கு ரூபா 200-ஐ அளித்தது. அதன் பின்னர் அவன் ஒரு சிறிய கடையை ஆரம்பித்து, அதனை 5 வருடங்களின் பின்னர் ஓர் புத்தகக் கடையாக மாற்றினான். இன்று, குமரவும் அவனது சகோதரனும் சிறியதோர் ஆனால் நன்கு களஞ்சியப்படுத்திய ஓடியோ/வீடியோ (audio/video) கடையொன்றை நடத்துகின்றனர். அங்கு அவற்றை அவர்கள் வாடகைக்கு விடுவதுடன் இறுவட்டுக்கள் மற்றும் ஒலி நாடாக்களில் ஒலிப்பதிவையும் மேற்கொள்கின்றனர். அவர்கள் வங்கியில் இருந்து கடன் பெற்றுத் தங்களது நிலத்தில் மின்சாரம், தண்ணீர் மற்றும் மலசலகூட வசதிகள் கொண்ட இன்னுமோர் வீட்டையும் நிர்மாணித்து வருகிறார்கள். பாடசாலையிலிருந்து இடைநடுவே விலகியதற்காக தான் ஒருபோதும் கவலையுறவில்லையெனவும், தான் பாடசாலையில் தொடர்ந்தும் இருந்திருந்தால் இந்த மட்டத்திற்கு அவர்களால் உயர்ந்திருக்கவே முடியாதெனவும் குமார கூறினார்.*

அதேவேளை, தங்களது கல்வியைப் பூர்த்தி செய்வதற்கு அதிகளவிலான வளம், நேரம் மற்றும் முயற்சிகள் என செவவழித்தவர்கள் தொழிலொன்றைத் தேடிக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, மாகாணத்தில் பொருளாதாரச் செயற்பாடுகள் இன்னமும் வரையறைகளைக் கொண்டதாகவும், புரிந்துணர்வு ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டு இரண்டு வருடமாகியும் கூட இப்பிரதேசம் முற்றிலுமான இயல்பு நிலைக்கு திரும்பாததாக உள்ளது. தாங்கள் 13 வருடக் கல்வியை முடித்திருந்தும், இன்னும் சில சமயங்களில் க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்திருந்தும் கூட, கூலிவேலையைத் தவிர வேறு வேலை வாய்ப்புக்கள் தங்களுக்கு கிடைக்கவில்லையென சில வாலிபர்கள் கூறினர்.

16. அநாமதேயத்தைப் பேணும் முகமாக பதிலளித்தவரின் பெயர் மாற்றப்பட்டுள்ளது.

*''முக்கியமானவர்களின் தொடர்புகள் அல்லது அவர்களுடைய செல்வாக்குகளின்றி வேலைகளைத் தேடிக் கொள்வது கடினம். அரச சார்பற்ற நிறுவனங்கள் வேலைகளை வழங்கினாலும் அது தொண்டர் அடிப்படையிலாகும். தொண்டர் அடிப்படையில் வேலை செய்வதற்கான பொருளாதார நிலையில் நான் இல்லை.''*

*(தமிழ் - பெண் 21 வயது)*

பிரதேசத்தை விட்டு வெளியேறி வேலை தேடுவதில் அவர்களின் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களினால் இவர்கள் கட்டுப்படுத்தப்படுவதினால் இத்தகைய செயற்பாடுகளும் குறைவாகவே உள்ளன. பதிலளித்தவர்களில் அநேகமானோர் நகரத்திற்கு அல்லது கொழும்பு போன்ற நகரிற்கு வேலை தேடிச் செல்வதிலான செலவுகளைப் (போக்குவரத்து மற்றும் தங்குமிடச் செலவுகள்) பற்றியும் கூறினர். நாட்டின் ஏனைய பகுதிகளில் சமூகத் தொடர்புகளைக் கொண்டிருந்த குடும்பங்கள் சில தங்கள் பிள்ளையை நண்பர்கள் அல்லது உறவினர்களின் இடங்களுக்கு அனுப்ப, சிறுவர்கள் நகரப் பகுதிகளில் தொழிலைத் தேடினர். அதிக எண்ணிக்கையிலான வயதுகூடிய சிறுவர்களும், இளம் வாலிபர்களும் தங்களின் கல்வி மட்டத்துக்குப் பொருத்தமில்லாத வகையில் தொழிலில் சேர்ந்திருந்தனர் அல்லது தொழில் எதுவுமின்றி இருந்தனர். கல்வியைப் பூர்த்தியாக்குவதற்கு சிறுவர்களிற்கு உள்ள இந்த ஊக்கமற்ற தன்மையை எடுத்துக்காட்டும் இந்த நிலைமையானது கொள்கை வகுப்போர் மட்டத்தில் கருத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

## 4.3 மோதலும் சிறுவர் உடல் நலமும்

ஆயுத மோதல்களின் நீடிப்பு சிறுவர்களது உடல் நலம் மற்றும் போஷாக்கு நிலைகளைப் பாதிக்கலாம். நாடு முழுவதிலுமான சிறுவர்களின் போஷாக்கு மட்டம் பற்றிக் கிடைக்கப் பெறும் தரவுகள் குறிப்பிடத்தக்க வகையில் மிதமான மட்டத்திலிருந்து மிகவும் கடுமையான போஷாக்கின்மை மட்டத்திற்கு வேறுபடுவதைக் காட்டுகின்றது. இந்நிலைமை, அதிகளவில் கர்ப்பிணித் தாய்மார்களின் போஷாக்கு மட்டம் குறைவதன் விளைவாக நிறை குறைந்த பிள்ளைகளின் பிறப்புக்கள் ஏற்படுகின்றன. (சேவ் த சில்றன் 2000). நிறை குறைந்த தன்மையானது (அதாவது பிறப்பின்போது 2.5 கிலோ கிராமுக்குக் குறைவான நிறை கொண்ட குழந்தைகள்) தேசிய சராசரி 16.7% வீதத்துடன் ஒப்பிடுகையில் கிழக்கு மாகாணத்தில் இது அண்ணளவாக 26% வீதமாக குறிப்பிடப்பட்டுள்ளது. திருகோணமலை மாவட்டம் நிறை குறைந்த பிள்ளைப் பிறப்பின் அதியுயர்ந்த வீதமாக 30.5% ஐப் பதிவு செய்கிறது. தடுப்பு மருந்து கொடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்வதற்காக, யுத்தத்தின்போது மனிதாபிமான முயற்சிகள் அனுமதிக்கப்பட்ட போதிலும், கிழக்கு மாகாணத்தில், நாட்டின் தேசியச் சராசரி அண்ணளவாக 93% வீதத்துடன் ஒப்பிடுகையில் தனியே அண்ணளவாக 73% வீதமான சிறுவர்களே முழுவதுமாக தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டனர். (DCS 2004b).

ஆய்வுகளின் போது, மோதலினால் தங்களது உடல் நலமும், போஷாக்கும் பல வழிகளில் பாதிக்கப்பட்டது பற்றிச் சிறுவர்கள் கூறினர். வன்முறைகளும் மற்றும் ஸ்திரத்தன்மையும் இல்லாத காலங்களில் கடைகள் மூடப்பட்டும், போக்குவரத்து வசதிகளும் இல்லாத பொழுது மிகவும் அடிப்படையான உணவுப் பொருட்களை பெறுவதற்குக் கூட சிரமப்பட்டனர். அநேகம் தாங்கள் காலை உணவின்றியும் அல்லது நண்பர்கள் யாரினதும் உணவைப் பகிர்ந்தும்தான் பாடசாலைக்குச் சென்றதாகச் சில சிறுவர்கள் குறிப்பிட்டனர்.

*''எனது தாயார் கர்ப்ப காலத்தில் சரிவர உண்ணக் கிடைக்காததால் எனது சகோதரர்கள் இருவர் போஷாக்கின்மையில் துன்புறுகின்றனர். இப்பொழுதும் கூட அவர்கள் நிறையில் குறைந்தவர்களாகவேயுள்ளனர்.''*

*(முஸ்லிம் - பெண் 16 வயது)*

மோதல்களினால் உடல்நல சேவைகளைப் பெற்றுக் கொள்வதும் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. தீவிரமான வன்முறைகள் நிலவிய காலங்களில் அநேகமான சிறிய வைத்தியசாலைகள் மற்றும் உடல்நல சிகிச்சை நிலையங்களும் மூடப்பட்டிருந்தன. பாதுகாப்பு வசதிகளைக் கொண்ட பெரிய வைத்தியசாலைகள் மட்டுமே இயங்கின. ஆனால் இவை, பெரிய நகரங்களிலேயே அமைந்திருந்ததினால் மட்டுப்படுத்தப்பட்ட போக்குவரத்து வசதிகளுடன், மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளையுடையவர்களுக்கு இவற்றின் சேவைகளை குறைந்தளவிலேயே பெறக்கூடியதாக இருந்தது. மோதல் காலங்களின் போது தாங்கள் சுகவீனமுற்ற வேளைகளில் வைத்திய சேவைகளை அளிப்பவர்களை அணுகவோ அல்லது தேவையான மருந்துகளைப் பெற்றுக் கொள்ளவோ முடியாமலிருந்தது பற்றிப் பல சிறுவர்கள் கூறினார்கள்.

*"எனக்கு ஆஸ்துமா நோய் உள்ளது. பிரச்சினைகளின் போது இரவு வேளைகளில் எனக்கு ஆஸ்துமா தொல்லைகள் ஏற்படும் பொழுது பெற்றோர்களால் என்னை உடனடியாக ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் செல்ல முடியாதிருந்தது. எங்களிடம் சொந்தப் போக்குவரத்து வசதிகள் இருக்கவில்லை. வாகன உரிமையாளர்களும், சாரதிகளும் இரவில் வாகனத்தைச் செலுத்த அச்சப்பட்டதால் வாகனமொன்றை வாடகைக்குப் பெற முடியாமல் இருந்தது. ஆகவே, எனது வைத்தியசாலைக்கான முன்னைய விஜயத்தின் போது கிடைத்த எஞ்சிய மருந்து வில்லைகளையும், சிறிது மருத்து எண்ணெயையும் அப்போது உபயோகிப்பேன். காலையில், பகற்பொழுதில் எங்களால் வைத்தியசாலைக்குச் செல்ல முடியும்."*

*(சிங்களம் - பெண் 16 வயது)*

*"பிரச்சினைகள் உள்ளபோது நாங்கள் பொது வைத்தியசாலைக்குப் போவதில்லை, ஏனெனில் அது எங்கள் கிராமத்திலிருந்து தொலைவில் உள்ளது. நாம் தனியார் சிகிச்சை நிலையத்தில் மருந்துகளை வாங்குவோம். சிலவேளைகளில் வைத்தியசாலைகளில் மருந்துகளே இருப்பதில்லை."*

*(தமிழ் - ஆண் 21 வயது)*

## 4.4 சிறுவர்களும் அவர்களுக்கு பக்கத் துணையாயிருக்கும் முறைகளும்

இந்த மதிப்பாய்வு, 18 வயதுக்குக் குறைவான 841 சிறுவர்களைக் கொண்ட 303 குடும்பங்களை உள்ளடக்கியது. இந்த மொத்த எண்ணிக்கையில், 599 சிறுவர்கள் 10-18 வயதிற்கு இடைப்பட்டவர்களாவர். இதற்கு, மேலதிகமாக இந்த மதிப்பாய்வு 19-25 வயதுகளிற்கிடைப்பட்ட 280 இளம் வாலிபர்களையும் உள்ளடக்கியது. இச்சிறுவர்கள் வாழுகின்ற குடும்பங்களில் அநேகமானவை (84%) ஆணை குடும்பத் தலைவராகக் கொண்ட இரு பெற்றோர்களும் உள்ள குடும்பங்களாகும். இதில் 70 குடும்பங்களில் பெண் குடும்பத் தலைவியாக உள்ளார், அரைப் பங்கிற்கும் மேற்பட்டவை தனிப் பெற்றோரைக் கொண்ட குடும்பங்களாகும். (அட்டவணை 4.4.1 ஐப் பார்க்கவும்)

***அட்டவணை 4.4.1 குடும்ப அமைப்பு***

| குடும்ப மாதிரி | குடும்பங்களின் எண்ணிக்கை | மொத்தம் (%) |
|---|---|---|
| **இரு பெற்றோரைக் கொண்ட குடும்பங்கள் (மொத்தம்)** | **254** | **83.8** |
| ஆண் தலைமை | 224 | 73.9 |
| பெண் தலைமை | 30 | 9.9 |
| **தனிப் பெற்றோரைக் கொண்டகுடும்பம் (மொத்தம்)** | **42** | **13.9** |
| ஆண் தலைமை | 2 | 0.6 |
| பெண் தலைமை | 40 | 13.2 |
| **சிறுவர் தலைமைத்துவத்திலான குடும்பம்** | **1** | **0.3** |
| **வேறு உறவினர் தலைமைத்துவத்திலானகுடும்பம்** | **6** | **2.** |

*மூலம்*: களத்தரவு (குடும்ப மதிப்பாய்வு) 2004

பெண்களை குடும்பத் தலைவிகளாகக் கொண்ட குடும்பங்களின் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானது வறுமை மற்றும் மோதல் ஆகிய இரண்டுடனும் தொடர்புபட்டதாக காணப்படலாம். உதாரணமாக மோதலினால் வயது வந்த ஆண்கள் சொந்தப் பாதுகாப்பிற்காக அப்பிரதேசத்தை விட்டு புலம் பெயர்ந்திருக்கலாம், அங்கவீனராகி இருக்கலாம், காணாமல் போயிருக்கலாம் அல்லது கொல்லப் பட்டிருக்கலாம். கணிசமானளவு குடும்பங்களில், தாயார் மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிந்து கொண்டிருக்கின்றதால் தொடர்ந்து குடும்பத்தாருடன் வாழ்வதில்லை. எப்படியிருந்த போதிலும். அவ்விதமான குடும்பங்களில் ஒரு சிலவே தங்களை ஆண் தலைமை தாங்குகின்ற தனிக் குடும்பமாக தெரிவித்துக் கொண்டன. மதிப்பாய்வின் போது, ஒரு குடும்பம், பெற்றோர்களின்மையால் ஒரு பிள்ளையால் தலைமை தாங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. இச்சம்பவத்தில், அக்குடும்பத்தின் இரு பெற்றோர்களும் இறந்து விட்டிருந்ததினால் 20 வயதுடைய மகளினால் தலைமை தாங்கப் படுகின்றது. அவள் தனது குடும்பத்தில் உடன் வசிக்கும் தனது இளைய சகோதரனையும், பாட்டனாரையும் பேணி ஆதரிக்கிறாள்.

கிழக்கு மாகாணத்தின் மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார வாய்ப்புகளினால், குடும்பத் தலைவர்கள் தொழில் தேடி புலம்பெயர்வது ஓர் சாதாரண நிகழ்வாக உள்ளதுடன் சிறுவர்களில் ஓர் தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் காணப்படுகிறது. கிழக்கில் குடும்ப உறுப்பினர்களின் புலம்பெயர்வானது பல வடிவங்களைக் கொண்டிருக்க முடியும். தமிழ் சமூகங்கள் இடையே புலம்பெயர்வானது மோதலுடனான ஒரு நேரடி விளைவாக ஏற்படலாம். மோதலின் பல்வேறு செயற்பாட்டாளர்களினாலான ஆட்சேர்ப்பு மற்றும் தொல்லைகள் அவர்களை அப் பிரதேசத்தை விட்டு விலகி நாட்டின் வேறெந்தப் பகுதிகளிலாவது புகலிடம் தேட நிர்ப்பந்திக்கலாம். இப்படியான சந்தர்ப்பங்களில், பிரதானமாக ஆண்களே பிரதேசத்தை விட்டு அல்லது கடல் கடந்தும் கூட வெளியேற முனைகின்றனர். முஸ்லிம் சமூகத்தினரிடையே அதிக எண்ணிக்கையிலான பெண்கள் தொழில் நாடி மத்திய கிழக்கிற்குப் புலம்பெயர்ந்துள்ளனர். மூன்று சமூகத்தினரிடையேயும், வறுமை அதேபோன்று மோதலினாலான புலம்பெயரும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. நெற் காணிகளுக்கு அல்லது மீன்பிடித்தலிற்கான உரிமைகளை மோதலின் காரணமாக அடைய வழியில்லாத போதும், ஜீவனோபாயத்திற்கான வேறு மார்க்கங்கள் இல்லாதபோதும், குடும்பத்தின் பிரதான வருவாயை ஈட்டுபவர்களாக அதிகளவிலான ஆண்கள் நாட்டின் ஏனைய பகுதிகளுக்குத் தொழிலுக்காக புலம் பெயரலாம்.

இப் புலம்பெயர்கின்ற போக்கினால் பல்விதமான பின்விளைவுகள் ஏற்பட முடியும். குடும்பத்தில் ஆண் உறுப்பினர்களின் புலம்பெயர்வானது பிள்ளையைப் பாதுகாப்பதிலான சுமையை தாய்மார்களிலும் அல்லது வயதில் கூடிய பிளளைைகளிலும் சுமத்துகிறது. இவை, இக்குடும்பங்களிற்கு மேலும் இடர்களுக்குட்படக்கூடியதும், பலவீனமானதும், பௌதீக ரீதியில் ஆபத்துக்குள்ளாக்கும் அபாயங்களையும் ஏற்படுத்த முடியும். ஆண் உறுப்பினர்களிடமிருந்து அனுப்பப்படும் பணமானது அதிகளவில் வீட்டில் குடும்பத்திற்குப் போதியதாக இருப்பதில்லையென்பதுடன், குடும்பத்தின் வயதில் கூடிய பிள்ளைகள் அல்லது தாய்மார்களை ஏதேனும் பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடவும் நிர்ப்பந்திக்கின்றது. புலம்பெயர்தலின் இன்னோர் விளைவாக, குடும்பத்தில் புலம்பெயரும் ஆண்கள் அதிகளவில் தாங்கள் தொழில் புரியும் இடங்களில், தங்களால் பேணப்பட வேண்டிய குடும்பத்திற்கு மேலதிகமாக இரண்டாவது குடும்பமொன்றையும் ஏற்படுத்திக் கொள்கின்றனர். இது ஒரே சமயத்தில் இரண்டு குடும்பங்களையும் பேணுவதில் இடையூறுகளையும், இரு குடும்பத்தையும் சேர்ந்த சிறுவர்களையும் பாதிக்கும். குடும்பங்களிற்கிடையிலான முரண்பாடுகள் போன்ற பிரச்சினைகளையும் எழுப்புகின்றன.

கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தில் உயர் வீதத்திலான தாய்மார்கள் பெருமளவில் வீட்டுப் பணிப் பெண்களாக தொழில் புரிவதற்கு மத்திய கிழக்கிற்கு புலம்பெயர்வது கருத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். இது சிறுவர்களை தந்தைமாரின் கவனத்தில் விடுகின்றது. இச் சிறுவர்களிற்கு கொடுக்கப்படும் கவனம் அதிகளவில் கருத்தில் கொள்ளப்பட வேண்டியதொன்றாகும். இச்சிறுவர்கள், தந்தையாரின் தனியான கவனத்தில் வைத்திருக்கப்படுவதை விட பெற்றோர்கள் யாரினதும் சகோதரர்களிடம் அல்லது பாட்டிமார் போன்ற வேறு உறவினர்களிடம் கையளிக்கப்படும் போக்கும் காணப்படுகிறது. தம் மனைவிமார் மத்திய கிழக்கிற்குச் சென்றதும், அநேகமான கணவன்மார்கள் பிள்ளைகளைப் பராமரிப்பதை விடுத்து தாம் வேறு வேலைக்குப் போவதை நிறுத்தி அனுப்பப்படும் பணத்தைக் குடி அல்லது போதை மருந்துகளுக்கு அநேகம் பாவிப்பதும் அவதானிக்கப்பட்டது. மனைவியின் பிரசன்னமின்மையால் கணவன்மார் மீள்திருமணம் செய்து அதன் மூலம் தனது முதல் மனைவி மூலமான பிள்ளைகளுக்கான தனது கடமைகளை உதாசீனம் செய்கின்ற சம்பவங்களும் இங்கு உள்ளன. இந்த நிலைமைகளெல்லாம் இச்சிறுவர்களை ஓர் அபாயத்திலிடுவதுடன் ஏனைய பாதுகாப்புக் கொடுப்பவர்களின் துஷ்பிரயோகங்களுக்கும் ஆளாகும் பலவீனமான நிலைக்குத் தள்ளுகிறது. இதனால். தனது ஏனைய சகோதரர்களின் நிலைமைகளை சீர்படுத்துவதற்காக வேலை செய்ய வேண்டிய தேவையை சிறுவர்கள் உணரக்கூடும்.

> *''எனது இரு பெற்றோர்களும் மத்திய கிழக்கிற்குச் சென்று விட்டனர். தந்தை கடந்த மாதம் திரும்ப வந்தார். எனது தாயாரிடமிருந்து பணம் எனது மாமாவிற்கே அனுப்பப்படுகிறது. கடந்த முறை மட்டுமே அவர் நேரடியாக எனக்கு பணம் அனுப்பியிருந்தார். அவர் மூன்று மாதத்திற்கொரு தடவை பணம் அனுப்புவார்.''*
>
> *(தமிழ் ஆண், வயது 21)*

அதிகளவில் திருமணமான பெண்களே மத்திய கிழக்கிற்கு பணிபுரியச் செல்வதென்பது சுவாரசியத்துக்குரிய ஒரு விடயமபகும். திருமணமாகாத பெண்கள் வெளிநாட்டிற்கு பணியாற்றச் செல்வதென்பது ''ஒழுக்கம்'' ஆகக் கருதப்படாதென ஒரு சிறுமி குறிப்பிட்டார்.

> *''நான் வேலைக்காக வெளிநாடு போவதை எனது குடும்பம் ஒத்துக்கொள்ளவில்லை. மத்திய கிழக்கிற்கு போன பெண்களை, ஆண்கள் திருமணம் செய்து கொள்ள விரும்புவதில்லை.''*
>
> *(முஸ்லிம் பெண், வயது 19)*

எப்படியிருந்த போதிலும், அநேகமான சமயங்களில், சிறுவர்களைப் பொறுத்தவரையில் குடும்ப அங்கத்துவர்களின் புலம்பெயர்வு சாதகமாகவே உணரப்படுகிறது. மோதல்களின் வறுமைப்படுத்தும் தாக்கங்களினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் குடும்பங்களின் தொழில் செய்யும் உறுப்பினர் ஒருவர், அவர் வேறு எங்கேனும் வசித்தாலும் கூட, அவர் மூலமான உதவி குடும்பத்தின் சில நெருக்கடியான பிரச்சினைகளை இலகுபடுத்துகின்றது என்றே அவர்கள் உணர்வதாக இது வரையிலான கலந்துரையாடல்கள் சுட்டிக்காட்டுகின்றன. அநேகமான சிறுவர்கள், வெளிநாட்டில் பணிபுரியும் தங்களது தாய்மார் அனுப்பிய பணத்திலிருந்து பாடசாலைப் புத்தகங்கள் மற்றும் அவசியமான பொருட்களை வாங்கியது பற்றிக் குறிப்பிட்டார்கள். இன்னும் சில சந்தர்ப்பங்களில், குடும்பங்கள் தங்களது வீடுகளைக் கட்டவோ அல்லது பெருப்பிக்க இயலுமானதுடன், மேலான வாழ்க்கைத் தரமொன்றை பொதுவாக அனுபவிக்கக் கூடியதாகவுமிருந்தது.

> *"எனது தாயார் மத்திய கிழக்கிற்கு சென்றதினால் எங்களால் 2000 ஆண்டில் வீடு கட்டக்கூடியதாக இருந்தது. இப்பொழுது அவர் குவைத் நாட்டில் இருக்கிறார் அத்துடன் ஒழுங்காக பணமும் அனுப்புகிறார். நாங்கள் அதில் உணவு, பாடசாலைச் செலவுகள், மின்சாரம், பரீட்சைக் கட்டணங்கள் போன்றவைகளுக்கு செலவிடுகின்றோம்."*
>
> *(தமிழ்ப் பெண், வயது 16)*

குடும்பங்களின் யுத்தத்தினால் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியை ஈடுகொடுப்பதற்கான ஓர் பொறிமுறையாகவே புலம்பெயர்ந்து தொழில் தேடுதல் என்பது காணப்படுகிறது. எப்படியிருந்த போதிலும் பாதகாப்புக் கொடுப்பவர்கள் - குறிப்பாக தாய்மார்கள் இல்லாதவிடத்து, உள்ளூரில் விடப்பட்டுச் சென்ற சிறுவர்களின் வாழ்க்கை, பாதுகாப்பு, அபிவிருத்தி மற்றும் நன்நிலைகள் என்பன பாதிக்கப்படலாம். இதனால் வறுமையைப் போக்குவதற்கான செயற்பாடுகள் அதற்காக செலுத்தப்படும் விலைக்கெதிரான பெறுமதி கொண்டதாக இருத்தல் வேண்டும்.

## 5. சிறுவர்களின் கண்ணோட்டம்

மோதல்களினால் சிறுவர்கள் எவ்விதம் பாதிக்கப்பட்டார்கள் என்பதை இதுவரையிலான கலந்துரையாடல் கவனம் செலுத்தியது. எனினும் இப்பிரச்சினைகள் சிறுவர்களின் கண்ணோட்டத்தில் நோக்கப்படாதவரை இவ்வாய்வு பூர்த்தியானதாக இருக்காது. இவ்வத்தியாயம் சிறுவர்களின் கண்ணோட்டத்தை – போரினால் அவர்கள் எவ்விதம் பாதிக்கப்பட்டார்கள், நாடும் அதன் எதிர்காலமும், இறுதியாக அவர்களது எதிர்கால நம்பிக்கைகள் மற்றும் அபிலாஷைகள் என்பவற்றில் கவனம் செலுத்துகிறது.

சிறுவர்களினை ஓர் குழுவாக கருதி, மோதல்களின்போது ஏற்பட்ட சொந்த அனுபவங்களுக்கப்பால் நோக்கும்படி கேட்டபொழுது அதிகளவிலான சிறுவர்கள், கல்வி நடவடிக்கைகளிற்கான தடைகள், மோதல்களினால் குடும்ப உறுப்பினர்களை இழத்தல் மற்றும் வருமானம் அற்றுப்போதல் என்பவற்றில் கவனம் செலுத்தினர். ஒரு குழுவாக சிறுவர்கள் எவ்விதம் பாதிக்கப்பட்டார்கள் என்பதன் தனிப்பட்ட கண்ணோட்டங்கள் அதிகளவில் அவர்களது சொந்த அனுபவங்கள் அல்லது அவர்கள் நண்பர்கள் மற்றும் அயலவர்களின் அனுபவங்களை அடிப்படையாக் கொண்டமைந்திருந்தன.

> *''அநேக சிறுவர்கள் தங்கள் கல்வியை இடைநிறுத்தினர். சிலர் சில வருடங்களை இழந்தனர். எங்களது வகுப்பில் கல்வியாண்டுகளை இழந்து மீண்டும் பாடசாலைக்குத் திரும்பிய வயது கூடிய சிறுவர்கள் அநேகம் உள்ளனர். விசேடமாக பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்கள் மோதல்களினால் பாதிக்கப்பட்டனர்.''*
>
> *(தமிழ் - பெண் 18 வயது)*

> *''சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளே பெரிதும் பாதிக்கப்பட்டன. அவர்களில் அநேகமானோர் காடுகளில் வாழ்கின்றனர். அவர்களால் படிக்க முடியவில்லை என்பதுடன் உண்பதற்கும் எதுவும் இருக்கவில்லை.''*
>
> *(சிங்களம் - பெண் 17 வயது)*

> *''இக்கிராமத்திலுள்ள சில சிறுவர்கள் தங்களது இளம் வயதிலேயே வேலை செய்யத் தொடங்கி விட்டனர். அவர்களில் அநேகமானோர் அரிசி ஆலைகளில் வேலை செய்கின்றனர்.''*
>
> *(தமிழ் - ஆண் 24 வயது)*

தங்களது பகுதியிலுள்ள அல்லது அமைவிடத்திலுள்ளவர்கள் பற்றியே சிறுவர்கள் கவனம் கொண்டிருந்தனர். நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள சிறுவர்கள் எவ்விதம் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்பது பற்றி அவர்கள் எதுவும் பேசவில்லை. அவர்கள், தாங்கள் வாழ்கின்ற, சூழவுள்ள, புவியியல் இடத்தையொட்டிய மட்டுப்படுத்தப்பட்ட அவர்களது அனுபவங்களோடு நோக்கும் குறுகிய உலகக் கண்ணோட்டத்தினைக் கொண்டவர்களாகவே காணப்பட்டனர். இப்பிரதேசத்தினுள் பிரயாணித்தல், தொடர்பாடல் என்பன அண்மைக் காலம்வரை பெரும் கஷ்டமானதாக இருந்ததுடன் இச்சிறுவர்களில் அநேகமானோர் கிழக்கின் ஏனைய பகுதிகள் மட்டுமன்றி, நாட்டின் ஏனைய பகுதிகள் மற்றும் மற்றைய நாடுகள் பற்றியும் சிறிதளவே அறிந்திருந்தனர். இத்தகவல் இடைவெளிகளை நிரப்பக்கூடிய கல்வி நடவடிக்கைகள் இங்கு இருக்க வேண்டும். ஆனால் இச்செயற்பாடுகளைச் சிறுவர்கள் புரிந்திருப்பதாகத் தெரியவில்லை.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னரும், பின்னருமான நிலைமைகளை ஒப்பிடுகையில், பதிலளித்த, அநேகமான எல்லோரும் போக்குவரத்து வசதிகள், கல்வி மற்றும் சுகாதார வசதிகளைப் பெற்றுக் கொள்வதிலான நிலைமைகள் முன்னேறியதாகக் குறிப்பிட்டனர். பயணக் கட்டுப்பாடுகளை அகற்றியது புரிந்துணர்வு ஒப்பந்தத்திலிருந்து கிடைத்த முக்கியமான நன்மை எனப் பலரும் குறிப்பிட்டனர்.

> *''ஓர் முன்னேற்றமுள்ளது. விரும்பிய இடத்திற்குக் கட்டுப்பாடுகளின்றி என்னால் போய் வரமுடியும்.''*
>
> *(தமிழ் - ஆண் 23 வயது)*

> *''அந்த நாட்களில் எங்கள் கிராமத்திற்கு முஸ்லிம்கள் வரமாட்டார்கள். இப்பொழுது இறுவட்டு வாங்குவதற்காக எங்கள் கடைக்கு வருகிறார்கள். எங்களுக்கு முறையான போக்குவரத்து வசதிகள் இருக்கவில்லை. ஆனால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் எங்களுக்குப் போக்குவரத்துப் பிரச்சினைகள் இருக்கவில்லை. எந்தப் பிரச்சினைகளுமின்றி சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்கின்றனர்.''*
>
> *(தமிழ் - ஆண் 24 வயது)*

*''எங்களால் இப்பொழுது பயம் இல்லாது வாழமுடியும். தமிழ் பிள்ளைகள் இப்பொழுது சுதந்திரமாக நடமாடி பாடசாலைக்குச் செல்ல முடியும். அநேகமான பகுதிகளுக்கு மின்சாரம் கொடுக்கப்பட்டுள்ளது. போர் இப்பொழுது இல்லாததினால், எங்களால் அச்சமின்றி பாடசாலைக்குச் செல்ல முடியும்.''*

*(சிங்களம் - ஆண் 16 வயது)*

புரிந்துணர்வு ஒப்பந்தம் குறித்தான சாதகமான பிரதிபலிப்புக்களைக் காட்டிய போதிலும், நாட்டின் அரசியல் நிலைமை மற்றும் எதிர்காலத்தில் அமைதிக்கான வாய்ப்புக்கள் பற்றிச் சிறுவர்கள் குறைந்தளவிலான நம்பிக்கையையே கொண்டுள்ளனர். நாட்டின் அரசியல் நிலைமைகள் தொடர்பாக பிரச்சினைகள் பற்றிய வினாக்களுக்கு எல்லாச் சிறுவர்களும் பதிலளிக்கவில்லை. இவ்விடயம் தொடர்பாக அநேக சிறுவர்களால் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க இயலாமலிருந்தது. இது அநேகமாக பதிலளித்தவர்கள் இவ்வினாக்களை வெளியாருடன்[17] கலந்துரையாடுவதில் தயக்கம் கொண்டிருந்திருக்கலாம். பதிலளித்தவர்களில் அநேகர் அமைதியைப் பேணும் முயற்சிகள் மற்றும் வடக்குக் கிழக்கின் மோதல்களுக்கு நிரந்தரத் தீர்வு காணும் முயற்சிகளில் அதிருப்தியுணர்வையே வெளிப்படுத்தினர்.

*''அரசியல் ஒரு பித்தலாட்டம். மற்றவர்களை ஏமாற்றுகின்ற ஓர் வழிமுறை. எப்படியிருந்த போதிலும் அமைதிப் பேச்சுவார்த்தைகள் ஓரளவிற்கேனும் வெற்றியளித்துள்ளன. பேச்சுவார்த்தைகளை நாங்கள் பலப்படுத்த வேண்டும். பேச்சுவார்த்தைகளும், கலந்துரையாடல்களும் இடையுறுக்குட்படின் நாடும் பெருந்துன்பத்திற்குள்ளாகும்.*
*அமைதிச் செயற்பாட்டினாலேயே இப்பகுதியில் உள்ள சில கைத்தொழில்கள் நன்கு நடைபெறுகின்றன. அமைதி குலைக்கப் படுமானால் இவ்வபிவிருத்திகள் எல்லாம் ஓர் முடிவுக்கு வரும்.''*

*(சிங்களம் - ஆண் 16 வயது)*

*''எங்களிற்கு நிரந்தர சமாதானம் தேவை மற்றும் மக்கள் சுதந்திரத்துடன் வாழக்கூடியதாக இருத்தல் வேண்டும். எங்களிற்கு ஒரு நிலையான மற்றும் நல்ல அரசாங்கம் தேவை, அது மக்களின் கஷ்டங்கள்/பிரச்சினைகளை எப்பொழுதும் தீர்த்தல் வேண்டும்.''*

*(முஸ்லிம் - பெண் 22 வயது)*

*''எனக்கு அரசியல் விருப்பமில்லை. எனக்கு அதைப்பற்றி எதுவுமே தெரியாது''.*

*(சிங்களம் - பெண் 19 வயது)*

*''இப்பொழுது கிழக்கிலும் அதேபோன்று நாட்டிலும் மிகக் குழப்பகரமான அரசியல் நிலைமைகளே காணப்படுகின்றன. இன்று நான் வீட்டிற்கு வரும் பொழுது நான் பொலிசாரால் சோதனைக்குட்படுத்தப்பட்டு நீண்ட நேரம் விசாரிக்கப்பட்டேன். என்னை அவர்கள் ஒரு தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர் என சந்தேகித்து சிறையிலடைத்து விடுவார்களோ, என்று அச்சமடைந்தேன். அதன்பின் எனக்கு என்ன நடக்குமென யாருக்கும் தெரியாது''.*

*(தமிழ் - ஆண் 21 வயது)*

பிரதேசத்தில் தொடரும் ஸ்திரத்தன்மை மற்றும் அமைதி பற்றிய அவர்களுக்கு நம்பிக்கையின்மை இருந்த போதிலும் அநேகமான சிறுவர்கள் அவர்களது சொந்த எதிர்காலம் குறித்துச் சாதகமான நம்பிக்கையைக் கொண்டிருந்தனர். மொத்தத்தில், தங்களது கல்வி நடவடிக்கைகளை பூர்த்தி செய்து, தொழிலைத் தேடி, தங்களின் பெற்றோரிற்கு உதவித் தங்கள் வருமானத்தை உயர்த்துவதையே தங்களது அபிலாஷைகளாகக் கொண்டிருந்தனர். நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ள இளைஞர்களிடையே காணப்பட்டது போன்றே பொதுத்துறை சார்ந்த பணிகளுக்கான விருப்பு தெளிவாகக் காணப்பட்டது. (இபார்குன் 2005)

*''நான் ஒரு வைத்தியராக விரும்புகிறேன். அதுதான் எனது இலட்சியம். நான் மேலும் கற்க விரும்புகிறேன். நான் வைத்தியரானால், என்னால் மக்களுக்குச் சேவையாற்ற முடியும்.''*

*(முஸ்லிம் - பெண் 16 வயது)*

---

17. இந்த ஆய்வை மேற்கொண்டிருந்த வேளையில், 2004 இன் ஆரம்ப காலப்பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினுள் ஏற்பட்ட பிரிவின் காரணமாக கிழக்கின் பாதுகாப்பு நிலைமைகள் பெருமளவில் மோசமடைந்திருந்தன. பிரிவுகளுக்கிடையிலான சண்டைகளால் முறுகல்கள் அதிகரித்ததின் விளைவாக மக்களிடையே 'தகவல்களை' விசாரிப்போர் குறித்து ஒரு அவநம்பிக்கை தோன்றியது. பண்புசார்ந்த நேர்காணலின்போது ஒரு குடும்பம், தகவல்கள் ஆயுதக் குழுக்களிடம் கையளிக்கப்படலாம் என்ற அச்சத்தில் வேண்டுமென்றே தங்கள் குடும்பம் பற்றித் தவறான தகவல்களை அளித்தது. தொடரும் குறைந்தளவிலான வாய்ப்புக்கள், பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் பிரதேசத்தில் அதிகரிக்கும் பாதுகாப்பின்மை பற்றியும் சிறுவர்கள் பேசினார்கள்

*"நான் அரசாங்கத் தொழிலொன்றே செய்ய விரும்புகிறேன். அது பாதுகாப்பு ஊழியர் வேலையாக இருந்தாலும் பரவாயில்லை."*

*(தமிழ் - ஆண் 21 வயது)*

தொழில் பயிற்சியாளராக அல்லது வேலைகளில் ஏற்கனவே ஈடுபட்டுள்ள சிறுவர்கள், தங்களது குடும்பத்திற்கு வருமானத்தை நல்க அல்லது தங்களது வியாபாரத்தைப் பெருக்கத் தங்களது தராதரத்தை மேம்படுத்த விரும்புகிறார்கள். தங்களது மேம்பட்ட அறிவுடன் சிலர் மத்திய கிழக்கில் தொழில் பெறும் நம்பிக்கையையும் கொண்டுள்ளனர்.

*"நல்லதோர் இயந்திரத் திருத்துநராக வருவதற்கு நான் கற்க விரும்புவதுடன் மத்திய கிழக்கிற்கு சென்று பணம் சம்பாதித்து எனது குடும்பத்தை முன்னேற்ற விரும்புகிறேன்."*

*(முஸ்லிம் - ஆண் 19 வயது)*

இந்த ஆராய்ச்சியினூடாக நேர்காணப்பட்ட சிறுவர்கள், தங்களதும் மற்றும் அவர்களது குடும்பத்தின் நிலைகளையும் மேம்படுத்துவதற்குப் போரினால் திணிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை வெற்றி கொள்வதற்கான மனவுறுதியையும், திடநம்பிக்கையையும் குறிப்பிடத்தக்களவில் காட்டினர். (பெட்டகம் 3ஐப் பார்க்கவும்) சில சிறுவர்கள் கல்வி நடவடிக்கைகளை இம்மாற்றங்களுக்கு உதவும் ஓர் வழியாகக் கருதினர்.

*"நான் கல்வி கற்றேன். இப்பிரதேசத்தில் எனக்கு வாழ விருப்பமில்லை. நான் பொருத்தமானதோர் வேலையைத் தேடிக் கொள்வேன். அத்துடன் போர் தொடங்குமாக இருந்தால் நான் இன்னுமோர் பகுதிக்குச் செல்வேன். போரில்லாத எந்தப் பிரதேசமும் எனக்குப் பரவாயில்லை."*

*(சிங்களம் - பெண் 16 வயது)*

இன மோதல்கள் மீள்தொடங்குகின்ற அல்லது 'வேறு' மோதல்கள் உருவாகக் கூடிய அச்சம் பற்றிய கருத்தை அநேக சிறுவர்கள் வெளிப்படுத்திய போதும் தாங்கள் ஓர் மாற்றத்திற்குரிய சக்தியாக இருக்க முடியுமென்பதை அவர்கள் உணர்ந்ததாகத் தெரியவில்லை. தாங்கள் வாழ்கின்ற அரசியல் சூழ்நிலைகளில் செல்வாக்கை உண்டுபண்ணுவதில் உதவ முடியாதவர்களாக இருப்பதை அநேக சிறுவர்கள் உணர்ந்தனர். அவர்களது நம்பிக்கைகளும், சக்திகளும் வறுமையிலிருந்து விடுபடுவதற்கான முயற்சிகளில் கவனம் கொண்டிருந்ததுடன் போர் அல்லது வறுமையினால் அவர்கள் மீது சுமத்தப்பட்ட நெருக்கடிகள் மற்றும் கஷ்டங்களைச் சமாளிப்பதிலேயே அவர்கள் கூடுதல் கவனத்தைக் கொண்டிருந்தனர்.

***பெட்டகம் 3: "அவர்கள் எல்லா வசதிகளையும் எமக்கு தந்தார்கள்"***

*சில பலகைகளாலும், கிடுகுகளினாலும் அமைக்கப்பட்ட ஒருசிறிய குடிசையில் கவிதா[18] தனது தாயார் மற்றும் இளைய சகோதரியுடன் வாழ்கிறாள். அவர்களுக்கு தண்ணீர், மின்சாரம் அல்லது மலசலகூட வசதிகள் இல்லை. அயலவருடையதையே தங்கள் தேவைக்குப் பாவித்தனர். கவிதாவின் திருமணம் முடித்த உடன்பிறப்புக்களின் உதவி மற்றும் பாடசாலைச் சிறுவர்களிற்கென அவர்கள் தாயார் செய்யும் சிற்றுண்டிகளின் விற்பனையால் வரும் சிறியதொரு வருமானத்திலேயே குடும்பம் வாழ்கின்றது. இருந்தபோதிலும், கவிதா மிகவும் திருப்தியுடன் தனது தாயாரும், மூத்த சகோதரனும் தங்களுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் அளிப்பதாகக் கூறினாள்.*

*நேர்காணலிற்கு முன்னதான ஒரு வாரத்தில், அவர்களது தாயாரிற்கு சிற்றுண்டிகளை விற்று வருமானம் ஈட்ட உதவி வந்த அவளது இளைய சகோதரன் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைவதற்காக வீட்டை விட்டுப் போய் விட்டான். அவன் கல்வியை தொடர வேண்டியதன் நன்மைகளை கலந்து பேசியிருந்த கவிதாவும் அவளது தாயாரும் அவனது இந்த முடிவினால் மிகவும் மனம் கலங்கினர். அவர்கள் முகாமிற்கு சென்று அவனை திரும்ப வரும்படி கேட்டனர், ஆனால் பலன் ஏதுமில்லை.*

*இவ்விதம் எண்ணற்ற பிரச்சினைகள் அவளை எதிர்கொண்ட போதும், வாழ்வில் தான் என்ன செய்ய வேண்டுமென்பது பற்றித் தெளிவான நோக்கோடும் மனவுறுதி கொண்டிருந்தாள்.*

*அவள் தனது க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குக் கல்வி கற்கிறாள். அதற்குத் தனது மூத்த சகோதரியிடமிருந்து இரவல் பெற்ற பொருட்களையே உபயோகிப்பதுடன் தான் ஒரு ஆசிரியையாகி, கல்வியை இலவசமாக வழங்கி தனது கிராமத்தை அபிவிருத்தி செய்ய வேண்டுமெனவும் விரும்புகிறாள்.*

18. பதிலளித்தவரின் அநாமதேயத்தைப் பேணுவதற்காக பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.

## 6. முடிவுரையும் பரிந்துரைகளும்

இலங்கையின் சூழ்நிலையில் ஆயுத மோதல்களினால் சிறுவர்கள் எவ்விதம் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதைப் புரிந்து கொள்வதற்கு மேலும் வலுச் சேர்ப்பதற்காகவே இவ்வாராய்ச்சி மேற்கொள்ளப் பட்டது. இது கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்களில் கவனம் செலுத்தி ஆராய்கின்ற ஒரு ஆய்வாக கருத்திற் கொள்ளப்பட்டது. இந்த அறிக்கை, பெருமளவில், 2004ஆம் ஆண்டு 303 குடும்பங்களையும், மற்றும் சிறுவர்களுடனான விரிவான நேர்காணல்கள் மூலம் பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையிலும் உருவாக்கப்பட்டதாகும்.

சிறுவர்கள் ஆயுத மோதல்களினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் என இரு வழிகளாலும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இவ்வாராய்ச்சியின் முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன. சிறுவர்கள் ஈடுபட்டிருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படும் கல்வி எனும் பிரதான நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளது. இடை விலகல் வீதம் இச்சந்தர்ப்பங்களில் எதிர்பார்க்கப்பட்டளவிற்கு உயர்வாக இல்லாவிடினும் கூட நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடுகையில் மோதல் பிரதேசங்களில் இது உயர்ந்த வீதத்தில் காணப்பட்டது. இளம் வாலிபர்களிடையே கல்வியில் முறையற்ற விதத்திலான இடைநிறுத்தல் அதிகளவாகக் காணப்பட்டது. (அதாவது போர் தீவிரமாகவிருந்த காலத்தில் சிறுவர்களாகவிருந்தோர்) இது பாடசாலையிலிருந்தான இடைவிலகல்கள் யுத்தத்துடன் தொடர்பு பட்டிருந்ததை சுட்டிக் காட்டலாம். மோதல் பிரதேசங்களில் பாடசாலைகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையை நாட்டின் ஏனைய பாகங்களுடன் ஒப்பிடுகையில் வேறுபாடுகள் இருந்தாலும் இவ்வேறுபாடு கணிசமானதென்பதற்கான அத்தாட்சிகளை கண்டுபிடிப்பதில் இவ்வாய்வு ஈடுபடவில்லை. எப்படியாயினும் இச்சிறுவர்களுக்குக் கிடைத்த கல்வியின் தரத்தில் கணிசமான வேறுபாடு இருக்கத்தான் செய்தது.

மோதல் காலங்களின்போது, சிறுவர்கள் முறையாகப் பாடசாலைகளில் அனுமதிக்கப்பட்டாலும், வன்முறைச் சம்பவங்களால் ஏற்பட்ட பாதுகாப்பின்மையினால் அநேகமான பாடசாலை நாட்கள் இழக்கப்படுவதினால் பாடசாலைக்கான மாணவர்களின் வரவு குறைவாகவே இருந்தது. பாதுகாப்பின்மையாலும் மற்றும் அச்சத்தினாலும் ஆசிரியர்கள் கூட வருகை தராமல் இருந்தனர் மற்றும் சில சந்தர்ப்பங்களில் அகதிகளை அல்லது ஆயுதப் படைகளை தங்க வைப்பதற்கு பாடசாலைக் கட்டிடங்கள் பயன்படுத்தப்பட்டன. மேலும் அநேகமான பாடசாலைகள், போதியளவிலான வசதிகளில்லாததினால், மோதலின் விளைவினால் அதிகளவில் பேணப்படாமல் அல்லது வளப்படுத்தப் படாமலும் இருந்தன. இவ்விதமான நிலைமைகளின் கீழ், சிறுவர்கள் பாடசாலையில் தொடர்ந்தும் கல்வி கற்க முயற்சிகள் எடுக்கையில், அவர்கள் பெற்ற கல்வியின் தரம் குறைவானதாக இருந்தது.

சில சிறுவர்கள் ஊதியமுள்ள அல்லது ஊதியமற்ற வேலைகளுக்காக பாடசாலையை விட்டு இடையில் விலகினர். சில சந்தர்ப்பங்களில் அவர்களது தீர்மானங்கள் மோதலின் விளைவுகளுடன் நெருங்கிய தொடர்புடையனவாக இருந்தன. குடும்பத்தின் பிரதான வருமானம் ஈட்டுபவர் கொல்லப்பட்டோ அல்லது அங்கவீனப்பட்டிருக்கையில், வறுமையினால் சிறுவர்கள் தொடர்ந்தும் பாடசாலைக்குப் போய் வருவதில் சிரமத்தை எதிர்நோக்கினர். குடும்பத்தின் வறுமையைப் போக்குகின்ற வழிமுறைகளைத் தேடி பாடசாலைகளிலிருந்து இடையில் விலகுகின்றனர். வேலை செய்கின்ற அநேக சிறுவர்களால் கூலிவேலைகளை மட்டுமே தேட முடிந்தது. அது அவர்களிற்கு கடினமானதாக இருந்ததுடன் குறைந்தளவு ஊதியத்தையுமே கொடுத்தது. வயதில் முதிர்ந்த சிறுவர்கள் மற்றும் இளம் வாலிபர்களிற்கும் கூட வேலை வாய்ப்புக்களில் முன்னேற்றம் கிடைக்கவில்லை. கிழக்கின் குறைந்தளவிலான பொருளாதாரச் செயற்பாடுகள் மற்றும் மட்டுப்பட்ட தொழில் வாய்ப்புக்கள் என்பன தொழில் செய்கின்ற வயது வந்தவர்களுக்கும், அதேபோன்று சிறுவர்களுக்கும் ஓர் மட்டுப்படுத்திய வருமானத்திற்கே வழிவகுத்தது.

மோதல்களின்போது ஏற்படும் பற்றாக்குறையுடன் இன்னோர் தாக்கமாக இப்பிரதேசத்தில் புலம்பெயரும் தன்மை காணப்பட்டது. அநேகமான குடும்பங்களில், குடும்ப உறுப்பினர் ஒருவர் தொழில் தேடி இப் பிரதேசத்தை விட்டு புலம்பெயர்ந்திருந்தார். தொழில் செய்யும் குடும்ப உறுப்பினர் என்பது வழமையில் போதியளவிலான உணவு, உடை மற்றும் பாடசாலைக்கான வளங்கள் என சிறுவர்களுக்குச் சிறந்த வாழ்க்கைத் தரத்தைக் கருதினாலும், அநேகமான சிறுவர்கள் அவர்களது பெற்றோர்கள் குறிப்பாக தாய்மார்கள் தொலைவில் வாழும்பொழுது சரியான கவனத்தையும், பாதுகாப்பையும் இழக்கலாம்.

தாங்கள் கண்ணுற்ற வன்முறைகள், பின் விளைவுகளின் ஓர் சாத்தியத்தால் அநேக சிறுவர்கள், அதன் தொடர்பான நிகழ்வுகளில் தங்களால் செல்வாக்கைச் செலுத்த இயலாத காரணத்தால் மோதல் புதிதாக நீடிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அதிருப்தியை தெரிவித்தனர். மோதல்கள் மீளவும் தொடங்காதிருந்தால் மட்டுமே நாட்டிற்கு ஒரு நன்மை உண்டு என நம்பினர். எப்படியிருந்த போதிலும், அவர்கள் முகம் கொடுத்த அனைத்து நெருக்கடிகளுக்கும் மேலாக, இவ் வாய்வில் நேர்காணப்பட்ட

அனைத்துச் சிறுவர்களுமே தங்களது சொந்த எதிர்காலம் குறித்துச் சாதகமான நம்பிக்கையைக் கொண்டிருந்தனர். மோதலின் பாதகமான விளைவுகளிற்குப் பிரதானமாக வறுமைக்கு ஈடுகொடுக்கும் வகையிலான உறுதியான வருமானமீட்டும் வழிகளைக் காணத் துடித்தனர்.

இவ்வாய்வின் மூலம் பல முடிவுகள் ஏற்பட்டன.

- இறப்பு, அங்கவீனம், குடும்ப உறுப்பினர்களின் இழப்பு மற்றும் இடம்பெயர்வு போன்ற மோதலின் நேரடியாகப் பல வழிகளில் சிறுவர்கள் பாதிக்கப்பட்டிருக்கையில் - அநேகமான சிறுவர்கள் மோதலினாலான வறுமையின் மூலம் பாதிக்கப்பட்டனர். மோதலின் விளைவாக அநேகமாக ஒவ்வொரு குடும்பமும் மேலும் ஏழ்மையடைந்தது. போரினால் அவர்கள் நிலத்தை இழந்தனர், சொத்துக்கள் மற்றும் ஜீவனோபாயங்களையும் இழந்தனர். வறுமையின் காரணத்தால் சிறுவர்கள் பாடசாலையில் தொடர்ந்து கற்க இயலவில்லை. சில சந்தர்ப்பங்களில் வருமானம் ஈட்டுபவர்களாக மாறவேண்டியும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். போதுமானதற்றதும், சீர்குலைந்ததுமான வீதிகள், வைத்திய சாலைகள் மற்றும் பாடசாலைகள் போன்ற உட்கட்டுமானங்களையும் கொண்ட பிரதேசத்தின் மோதல்களினால் தூண்டப்பட்ட வறுமையும் சிறுவர்களின் வளர்ச்சியையும் மற்றும் நன்னிலையையும் பாதித்தன.

- சில வேறுபாடுகள் இருந்தபோதிலும் மூன்று இனங்களுக்கிடையிலும் ஆண், பெண் வேறுபாடின்றிய உண்மைத் தோற்றத்தை இது எடுத்துக் காட்டுகிறது. மோதலின் சீர்குலைக்கும் தன்மையானது மூன்று இனங்ளையுமே மேலும் வறியவர்களாக்கியுள்ளது. கிழக்கு மாகாணத்தில் மோதல் பகுதிகளிலிருந்து மிகவும் தூரத்திலிருப்பதால் அம்பாறை மாவட்டத்தில் வசிப்போர், குறிப்பாக அம்பாறை நகரில் வசிப்போர் குறைந்தளவிலேயே பாதிக்கப்பட்டதாகத் தெரிகிறது. எப்படியிருந்த போதிலும் மோதல் ஆண்பிள்ளைகள் மற்றும் பெண்பிள்ளைகள் என இரு பாலாரையுமே கல்வி, சிறுவர்களை வேலைக்கமர்த்தல், உடல் நலம் மற்றும் போஷாக்கு ஆகிய விடயங்களில் சம அளவிலேயே பாதித்தது.

- இவ்வாய்வில் உள்ளடக்கப்பட்ட இரு குழுக்களான 'சிறுவர்களுள்' மோதல்கள் தீவிரமாக உச்ச நிலையில் இருக்கையில் சிறுவர்களாக இருந்தவர்கள், புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் வாழ்கின்ற இன்றைய சிறுவர்களை விட அதிகளவில் பாதிக்கப்பட்டவர்களாகத் தெரிகிறது. பிள்ளைப் பராயத்தில் ஆரம்ப காலப்பகுதிகளில், மோதல்களின் உச்சநிலைக்கும், பாதுகாப்பின்மைக்கும் முகம் கொடுத்த சிறுவர்கள் தொடர்ச்சியான அச்ச உணர்வுடனேயே இன்னமும் வாழ்கின்றனர். அவர்களது கல்வி பாதிக்கப்பட்டதுடன், கல்வி மட்டத்தில் அவர்கள் அடைந்த பெறுபேறுகள், மோதலினால் கல்வி பாதிக்கப்பட்டிராத சந்தர்ப்பங்களில் அடைந்திருக்கக் கூடிய கல்வி மட்டங்களை விட குறைவானதாக இருக்கலாம். பிரச்சினைகளை மேலும் மோசமாக்க, இன்று அவர்களை வேலைக்கு அமர்த்தக்கூடிய வயதில் கிழக்கில் அவர்களுக்கு மிகக் குறைவான பொருளாதாரச் செயற்பாடுகளும் மற்றும் தொழில் வாய்ப்புக்களுமே உள்ளன. பல சந்தர்ப்பங்களில், மோதல்களினால் உருவாக்கப்பட்ட மிகச் சிரமங்கள் அல்லது நெருக்கடிகளிற்கிடையில் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ந்ததிற்கு வேலையில்லாமை அல்லது திறமைகள் தேவையில்லாத கூலிவேலைகளே வெகுமானமாக கிடைப்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

- இறுதியாக, வயது வந்தவர்கள் மற்றும் சிறுவர்கள் ஆகியோரிடையே மோதல்கள் திரும்பத் தொடங்கலாம் என்கின்ற அச்சம் காணப்படுகிறது. இத்தகையதோர் நிலைமை மீது தங்களுக்கு எந்தக் கட்டுப்பாடும் அல்லது செல்வாக்குச் செலுத்தும் தன்மையில்லையென சிறுவர்கள் உணர்கிறார்கள். வடக்கு மற்றும் கிழக்கின் மோதல் நிலைமைகளே உலகின் மீதான அவர்களின் பார்வையை வரைவிலக்கணப்படுத்துகிறது. இது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, ஏனெனில் மோதல்கள் இல்லாத பகுதிகளில் மக்கள் எவ்விதம் வாழ்கிறார்கள் என்பது பற்றிய அறிவு அவர்களுக்கு இருக்கவில்லை. மோதல் மற்றும் அவர்களது அனுபவங்கள் என்பவற்றிற்கிடையிலும், தங்களால், தங்கள் குடும்பத்தால் மற்றும் சமூகத்தால் முகம் கொடுக்கப்படும் பிரச்சினைகளை வெற்றி காண்பதற்கான மனவுறுதிப்பாட்டையும், சக்தியையும் சிறுவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள சிறுவர்களுக்கு உதவுவதற்கான கொள்கைகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் என்பன குறிப்பாக சிறுவர்கள் குறித்தான கல்வி, சிறுவர் நலம் மற்றும் சிறுவர்களை வேலைக்கமர்த்தல் போன்ற பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தின. இந்தப் பிரச்சினைகள் கொள்கை வகுப்பாளர்களின் உடனடிக் கவனத்தை வேண்டுகிறது. இவ்வாராய்ச்சியின் முடிவுகள் பொதுவாக கிழக்கு மாகாணத்தில் நிலவுகின்ற வறுமையாலும் அதேபோன்று மிகவும் குறிப்பாக அவர்களது குடும்பத்தில் நிலவுகின்ற வறுமையாலும் பெரிதும் பாதிப்படைகிறார்கள் எனத் தெரிவிக்கிறது, இவையும் உடனடியான கவனத்தை வேண்டுகிறது. இதன்படி பல கொள்கை ரீதியிலான பரிந்துரைகள் இவ்வறிக்கையிலிருந்து தோன்றின.

1. கிழக்கிலுள்ள மக்கள் பொதுவாக வறிய நிலையிலுள்ளதால் மோதல்களின் விளைவுகளிற்கு ஈடுகொடுப்பதில் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். குடும்பத்திலான வறுமை பிள்ளைப் பராயத்திலும் வறுமையை விளைவிக்கிறது; இது சிறுவர்களின் வளர்ச்சிக்கும், நன்நிலைக்கும் பாதகமாக உள்ளது. சிறுவர்களைக் குறித்து மட்டும் தனியே கவனம் செலுத்துகின்ற முன்னெடுப்புக்களை மேற் கொள்வதை விட, அவர்கள் சார்ந்த குடும்பங்களை இலக்காகக் கொண்டு தொழில் மற்றும் வருமானம் ஈட்டும் வாய்ப்புக்களை கொடுக்கும் அபிவிருத்திக்கான இடையீடுகளை அளிப்பதே, சிறுவர்களின் நிலைமைகளை மேம்படுத்துவதற்காக இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் இன்று உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை ஆகும். சிறிய அளவிலான கடன் வசதி நடவடிக்கைகள், சிறிய மற்றும் நடுத்தர தொழில் அபிவிருத்திக்கான உதவிகள், கிழக்கின் விவசாயம் மற்றும் மீன்பிடித்துறைகளை நவீனப்படுத்துவதற்கான உதவிகள் போன்றவற்றுக்கான தேவையும், கேள்வியும் உள்ளது. இவ்விதமான இடையீடுகள், இன்று சிறுவர்களாக உள்ளவர்களுக்கும் அதே போன்று அன்று மோதல்களின் போது சிறுவர்களாக இருந்தவர்களுக்கும், இன்றுவரை போதாததாக உள்ள பல்வேறுபட்ட வாய்ப்புக்களை உருவாக்கும்.

2. இப்பிரதேசங்களில் உட்கட்டுமானம் மற்றும் பொதுச் சேவைகளைப் புனருத்தாரணம் மற்றும் மீள் நிர்மாணிப்பதற்கான உடனடித் தேவைகள் உள்ளன. சீர்குலைந்த வீதிகள் மற்றும் எப்போதாகிலுமான பொதுப் போக்குவரத்துச் சேவை போன்ற சீரற்ற போக்குவரத்து வசதிகளாலும் பொருளாதார நடவடிக்கைகள் திண்டாடியது. நீர்ப்பாசன முறைகளின் சீரற்ற பராமரிப்புக்களால் விவசாய நடவடிக்கைகளும் குறிப்பாக நெற்செய்கை; அதன் உயர்திறன் கொண்டதாக இருக்கவில்லை. இது தங்கள் ஜீவனோபாயத்திற்காக நெற்செய்கையில் தங்கியிருந்த உட்பகுதி மக்களை குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் பாரிய பிரச்சினையை ஏற்படுத்தியது. சீரற்ற உட்கட்டுமானங்கள் மற்றும் அவற்றை பெற்றுக் கொள்வதிலான குறைபாடுகளின் விளைவாக விவசாயப் பொருட்களிற்கான சந்தை வாய்ப்புக்கள் போதியளவில் இல்லாமையும் இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்குத் தடைகளாக இருந்தன. இந்த அபிவிருத்திகள், குடும்பத்தின் வருவாய் மட்டங்களை அதிகரிப்பதினால் பிரதானமாக மறைமுகமாக சிறுவர்களுக்கு உதவுவதுடன், சீரான போக்குவரத்துச் சேவைகள் மற்றும் உட்கட்டுமானங்களுக்கும் வழியேற்படுத்துவதால் நேரடியாகவும் உதவும். இவை தண்ணீர் போன்ற வளங்களிற்கான வழிவகைகளையும் ஏற்படுத்துவதால் சிறுவர்கள் பாடசாலைக்குப் போய் வருதல் மற்றும் வீட்டுத் தேவைகளுக்கு நீர் எடுக்கப் போய்வருதல் போன்றவற்றுக்காக செலவழிக்கும் நேரத்தையும் கணிசமானளவு குறைக்கிறது. இது அவர்களை, தங்களது கல்வி நடவடிக்கைகளிலும் மற்றும் தமது சொந்த அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் கூடுதலான நேரத்தை உபயோகிக்க வழிசெய்வதுடன் அவர்களது சிறந்த உடல் நலத்துக்கும், போஷாக்கிற்கும் பங்களிக்கிறது.

கிழக்கு மாகாணத்தில் சிறுவர்களுக்காக அளிக்கப்படும் கல்வியின் தரம் மேம்படுத்தப்படல் வேண்டும். நகரிலுள்ள ஓரிரண்டு பாடசாலைகளைத் தவிர இங்குள்ள பல பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர்களுக்கான பற்றாக்குறை, நூலகம் மற்றும் ஆய்வுகூட வசதிகளின்மை போன்றன கல்வியில் குறைவான பெறுபேறு அடைவதில் பங்களிக்கின்றன. அநேகமான பாடசாலைகள் வளப் பற்றாக்குறைகளால் கலைத்துறை சார்ந்த கல்வி நடவடிக்கைகளுக்கே உதவுகின்றன. இதனால், பாரம்பரிய திறனிற்கு அப்பால் தொழில்களைப் பெறுவதற்கான அவர்களது உள்ளாற்றலை விருத்தி செய்யக்கூடிய கணித அல்லது விஞ்ஞானத்துறைகளில் போதியளவிலான அறிவைப் பெறுவதில்லை. போதியளவில் நூலக மற்றும் வேறு கற்கும் முறைகள் இல்லாமையானது, இவ்விதமான நிலைமைகள் இல்லாதபொழுது வேறுவிதமாக தங்கள் வாழ்வை அணுகக்கூடிய அச் சிறுவர்களின் அறிவை அவர்களது கிராமம் அல்லது சமூகத்திற்கு அப்பாலான வெளி உலக அறிவைப் பெறுவதில் மட்டுப்படுத்துகிறது. இப்பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்துவதற்கு சிறந்த தரத்திலான கல்வியுடன் இணைந்ததாக உயர்ந்த கல்வி மட்டத்தை அடைதலிற்கேற்ப பரந்தளவிலான தொழில் வாய்ப்புக்களும் தேவை. இல்லாவிடின் அவர்கள் முகம் கொடுக்கும் கடும் நெருக்கடிகளின் மத்தியிலும் பாடசாலையில் தொடர்ந்து கல்வி கற்கும் சிறுவர்கள் பின்னர் ஒருவேளை பெரும் ஸ்திரமின்மைக்கும் மற்றும் பிரதேசத்தின் புதிய வடிவிலான மோதல்களுக்குமாகவே தங்களின் நேரத்தைச் செலவிடுவதாக முடியும்.

## இறுதியாக ஒரு வார்த்தை .....................

இந்த அறிக்கை வலியுறுத்துவது போல இலங்கையின் கிழக்குப் பகுதியில் புதிய மோதல்களுக்கான சாத்தியக்கூறுகள் பெருமளவில் உள்ளது. எல்லா இனங்களுக்கிடையிலும் அரசியல், அரசியல் வாதிகள் மற்றும் தற்போதைய அரசியல் சூழ்நிலைகள் பற்றிய மாயையிலிருந்து நீங்கிய யதார்த்த நிலை காணப்படுகிறது. இப்பிரதேசத்தின் அபிவிருத்திக்கு வடக்கு மற்றும் கிழக்கின் மோதல்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளுடனான அரசியல் தீர்வொன்று அவசியமாக இருக்கையில், அது கிழக்கின் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்கவோ அல்லது வன்முறை மோதல்களின் இல்லாமையையோ உறுதிப்படுத்தாது. கிழக்கில் வளங்களிற்குப் பாரியதோர் பற்றாக்குறை உள்ளதுடன் இக்குறைபாடுகள் குறித்து, அப்பிரதேசத்தில் மோதல்களுக்கான சாத்தியப்பாட்டைக் குறைப்பதற்காக உடனடியாகக் கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

26/12/2004 இன் கடற்கோளினால் அழிவுகள் ஏற்பட்டாலும், இவ்வறிக்கையின் முடிவுகளும், பரிந்துரைகளும் தொடர்ந்தும் வலுவுள்ளவையாக உள்ளன. இவை எல்லாவற்றினாலுமே கிழக்கில் அபிவிருத்திக்கான இடையீடுகளினதும் மற்றும் அதிகரித்த தொழில் மற்றும் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்குமான உடனடித் தேவைகள் ஏற்பட்டன. மோதலினால் கடந்த 20 வருடகாலமும் துயருற்றவர்களை அலட்சியப்படுத்திக் கடற்கோளினால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களில் மட்டும் கவனம் செலுத்தியமையும் மேலதிகமாக புதிய முரண்பாடுகளைத் தோற்றுவித்தன. கடற்கோளினால் அல்லது மோதலினால் பாதிக்கப்பட்ட மக்களை, குறிப்பிட் அனர்த்தத்தின் பயனாளிகள் என இலக்கு வைக்காமல், பிரதேசத்தை மேம்படுத்தும் முழுமையான, பரந்த அணுகுமுறையானது அபிவிருத்தி சார்ந்த இடையீடுகள் தொடர்பான இன்னோர் விவாதமாகும். கடற்கோளின் காரணமாக உதவிகளின் உட்பாய்ச்சல் அதேபோன்று கொள்கை வகுப்பாளர்களின் கவனம் என்பன கிழக்குப் பிரதேசத்திற்குத் திரும்பியது. இந்த அறிக்கையில் கூறப்பட்ட பரிந்துரைகள், நடைமுறைப்படுத்துவதற்கு மிகவும் சுலபமாக வந்திருக்கக் கூடிய மீள்நிர்மாணம் மற்றும் உட்கட்டுமானங்களின் புனருத்தாரணம் மற்றும் தொழில்களுக்கான போதுமான வளங்களை வழங்கல் போன்றன கிழக்கின் பொதுவான அபிவிருத்திக்குரியதாகும்.

## 7. Bibliography


Amarakoon, Lionel (nd), *Armed Conflict and Sri Lankan Children*, Save the Children in Sri Lanka Report, Colombo (Web: www.savechildren-alliance.org.np).

Boyden, Jo. (1997), 'Childhood and the Policy Makers: A Comparative Perspective on the Globalization of Childhood' in James, A. & A. Prout (eds.), *Constructing and Reconstructing Childhood: Contemporary Issues in the Sociological Study of Childhood*, London & New York: RoutledgeFalmer.

Boyden, J., J. de Berry, T. Feeny & J. Hart (2002), *Children Affected by Armed Conflict in South Asia: A review of trends and issues identified through secondary research*, Working Paper Series, Refugee Studies Centre, Oxford: Refugee Studies Centre.

Chase, Rob (2000), 'Healing and Reconciliation for War-Affected Children and Communities: Learning from the Butterfly Garden of Sri Lanka's Eastern Province', Paper presented at Conference for War-Affected Children, Winnipeg, Canada 2000. (Web: www.waraffectedchildren.gc.ca/sri lanka-en.asp)

*'Children as Zones of Peace: A Call for Action – Promoting and Protecting the Rights of Children Affected by Armed Conflict in Sri Lanka'*. (Web: www.czop.org)

Coalition to Stop the Use of Child Soldiers (2001), *The Child Soldiers Global Report - May 2001*, London: Coalition to Stop the Use of Child Soldiers.

Department of Census & Statistics (1999), *Child Activity Survey Sri Lanka 1999*, Colombo: DCS.

______________________________ (2001), *Census of Population and Housing 2001: Population by Sex, Age, Religion, Ethnicity according to District and DS Division (Provisional)*, Colombo: DCS.

______________________________ (2003a), *Household Income and Expenditure Survey – 2002, Preliminary Report*, Colombo: DCS.

______________________________ (2003b), *Poverty Indicators: Household Income and Expenditure Survey 2002*, Colombo: DCS.

______________________________ (2003c), *Results of Household Income and Expenditure Survey: Conducted in Northern and Eastern Province – 2002/03*, Colombo: DCS.

______________________________ (2004a), *Official Poverty Line for Sri Lanka*, Colombo: DCS.

______________________________ (2004b), *Poverty Statistics*, Colombo, DCS

( Web: http://www.statistics.gov.lk/poverty/PovertyStatistics.pdf)

De Silva, Harendra (2003), *Power Games in War and Peace: The tragic impact of corruption, violence and impunity on the Sri Lankan child*, Sri Lanka.

Dias Bandaranaike, Anila (2004), *Are Lifestyles and Living Conditions in Sri Lanka Changing?: Preliminary Findings from the Consumer Finances and Socio-Economic Survey 2003/04 of the Central Bank of Sri Lanka*

Fonseka, Bhavani (2003), *'The time has come to make space for children in the peace process', Peace Monitor*, Vol. 5, Issue 4, December 2003, pp. 21-23.

Fyfe, A. (1989), *Child Labour*, Cambridge: Polity Press.

Ganepola, V. & P. Thalaysingam (2004), *Poverty and Conflict: A Review of Literature*, Colombo: CEPA.

Gordon, D., C. Pantazis & P. Townsend (nd), *Child Rights and Child Poverty in Developing Countries: Summary Report to UNICEF*, Bristol: Centre for International Poverty Research.

Gordon, D., S. Nandy, C. Pantazis, S. Pemberton & P. Townsend (2003), *Child Poverty in the Developing World*, Bristol: Policy Press.

Haniffa, Farzana (2003), 'Children Affected by armed Conflict' in *State of Human Rights 2004*, Colombo: Law and Society Trust.

Hettne, Björn (2002), *Poverty and Conflict: the methodology of a complex relationship*, Paper for seminar on Democratisation and Conflict Management in Eastern Africa, Göteborg, Feb 28 - March 3, 2002.
(Web: http://www.africastudies.gu.se/conference/hettne.pdf).

Ibargüen, Claudia (2005), *Youth Perceptions: Exploring Results from the Poverty and Youth Survey*, Colombo: CEPA.

James, A. & A. Prout (eds.) (1997), *Constructing and Reconstructing Childhood: Contemporary Issue in the Sociological Study of Childhood*, London & Philadelphia: RoutledgeFalmer.

Jayaratne, R. (2002), *Situation Analysis on the Worst Forms of Child Labour in Sri Lanka*, Paper presented at National Conference to Formulate a Strategic plan to Eliminate Worst Forms of Child Labour in Sri Lanka, August 2002, Colombo, Sri Lanka.

Keethaponcalan, S. I. (2003), *'Child Soldiers in Civil War: Why do Children Become Soldiers?', Polity*, Oct-Nov 2003, Vol. 4. No. 3, pp. 11-15.

Machel, Graça (2001), *The Impact of War on Children*, London: Hurst & Company.

Mawson, A., R. Dodd & J. Hilary (2000), *War Brought us here*, London: Save the Children UK.

Maxwell, Simon (1999), *The Meaning and Measurement of Poverty*, ODI Poverty Briefing, London: ODI.

National Peace Council/MARGA Institute (2001), *The Cost of the War: Economic, Social and Human Cost of the War in Sri Lanka*, Colombo: National Peace Council.

Rodgers, G. & G. Standing (eds.) (1981), *Child Work, Poverty and Underdevelopment*, Geneva: International Labour Office.

Rotberg, Robert (1999), *Creating Peace in Sri Lanka: Civil War and Reconciliation*, Washington D. C.: Brookings Institution Press.

Rupesinghe, K. (2002), *Enhancing Human Security in the Eastern Province*, Colombo: Centre for Policy Alternatives & Berghoff Foundation for Conflict Studies.
(Web: www.cpalanka.org/roadmap.html).

Save the Children UK (1998), *Children Affected by Armed Conflict in North and East Sri Lanka: Situation Report No. 2 ñ August 1998*, London: Save the Children UK.

Save the Children in Sri Lanka (2000), *Country Situation Analysis: Country Strategy Planning - June 2000*. (Web: www.savechildren-alliance.org.np)

Save the Children in Sri Lanka (2003), *Mother Migration Impact on Children and Families: Workshop Proceedings June 2003*, Colombo: Save the Children in Sri Lanka

Sri Lanka Project (2003), *Sri Lanka Peace Talks and Related Events: Timeline*, The Refugee Council: London.

Tudawe, Indra (2000), *Review of Poverty Related Data and Data Sources in Sri Lanka*, Colombo: Institute of Policy Studies.

UNICEF Colombo (1990), *A profile of the Sri Lankan child in Crisis and Conflict*, Colombo: UNICEF.

United Nations (1995), *World Summit for Social Development Agreements*, (Web: http://www.un.org/esa/socdev/wssd/agreements/poach2.htm).

University Teachers for Human Rights (Jaffna) (UTHRJ) (2003), '*Child Conscription and Peace: A Tragedy f Contradictions'*, Special Report No. 16, 18 March 2003. (Web: www.uthr.org/reports).

Wimaladharma, Sarah (2003), *What are the main constraints to the rehabilitation of child soldiers in Sri Lanka*, Unpublished MSc Thesis, SOAS, London.


**Conferences:**

Child Rights and Child Poverty in the Developing World, Conference, 22 October 2003, London School of Economics.

National Conference on Opportunities and Challenges for the Development of Conflict-Affected North East Sri Lanka, 7-9 May 2004, Senate Building, University of Peradeniya.

# பின்னிணைப்பு

**பின்னிணைப்பு - 1 இலங்கையின் தேசப்படம்**



## பின்னிணைப்பு 2 - மதிப்பாய்வு செய்யப்பட்ட கிராமங்களின் பெயர்கள்

### அம்பாறை மாவட்டம்

அக்கரைப்பற்று
அம்பாறை நகரம்
அட்டாளைச்சேனை
அட்டாளப்பாலம்
மத்திய முகாம்
சின்ன முகத்துவாரம்
கல்முனை
கல்முனைக்குடி
காரைதீவு
ஜெயவர்த்தனபுர
நிந்தவூர்
பாலமுனை
சம்மாந்துறை
திருக்கோவில்
திரியகேணி
வெஹரகம

### மட்டக்களப்பு மாவட்டம்

சத்துருக்கொண்டான்
செங்கலடி
ஏறாவூர்
காத்தான்குடி
கிரான்
கொம்மாந்துறை
ஓட்டமாவடி
பூங்நொச்சிமுனை
தாண்டியடி
வாழைச்சேனை

### திருகோணமலை மாவட்டம்

அலஸ் தோட்டம்
ஆனந்தபுரி
தீவாரகம
இக்பால் நகர்
ஜமாலியா நகர்
கஸ்தூரி நகர்
கிண்ணியா
குச்சவெளி
மூதூர்
றோட்டறிகம
வல்லூர்
விலகம் விகாரை

DFID Department for International Development

cepa centre for poverty analysis